அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர்: 7 இதழ் 6 விலை அ. 4	மன்மத ௵ புரட்டாசி ௴ செப் - அக்—1955	வருட சந்தா ரூ. 2-4-0

எப்பொழுதும் உருத்திரம் ஜெபித்தே அம்பலவாணன்
திருவடியடைந்த உருத்திர பசுபதி நாயனர்.
(பெரிய புராணச் சித்திர விளக்கம் 18. பக்கம் 245)



பொருளடக்கம்

		பக்கம்
1. கீதாஸாரம்	(திருப்புகழ்மணி)	... 241
2. உருத்திர பசுபதி நாயனுர்	(கி. வா. ஜ.)	... 245
3. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்	(சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)	... 247
4. கடமையும் உரிமையும்	(V. R. G.)	... 253
5. தூயமென்பார் தொழில்	(வா. இராமலிங்கம்பிள்ளை)	... 258
6. சிவபிரான் இடையனுய் வந்த திருவிளையாடல்	(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை)	... 261
7. பார் பூத்த வல்லி	(கு. நடேச கவுண்டர்)	... 265
8. ஜய தேவர்	(ரா)	... 269
9. ஸ்ரீவைஷ்ணவர் செல்வம்	(V. S. வேங்கடராமன்)	... 272
10. தலைமலை கண்ட தேவர்	(ரசபதி)	... 277
11. DHAYA	*(Thiruppugal Mani)*	... 287

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ˝ முதல் பங்குனி மீ˝ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு இலங்கை உள்பட ரூ. 2—4—0. நான்கு வருடச் சந்தா ரூ. 8—4—0. அயல் நாடுகளுக்கு வருடச் சந்தா 4 ஷில்லிங்குகள். நான்கு வருடச் சந்தா 15 ஷில் லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னமேயே மன்மத ஆண்டிற்கு உரிய தங்கள் சந்தாத் தொகை 2—4—0ம் அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை அனுப்பப் பெறும். வருஷத்தின் நடுவில் சந்தாச் செலுத்தினுல், முன் பகுதிகள் கைவசம் இருப்பதை உத்தேசித்து, சந்தாதாரர்களாகச் சேர்க்கவோ மறுக்கவோ நேரும். ஆகையால், ஆண்டு பிறப்பதன் முன் சந்தா செலுத்துவதே நலம்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 7	மன்மத ஹு புரட்டாசி மீ செப்டம்பர்—அக்டோபர்-1955	இதழ் 6

கீதாஸாரம்
(திருப்புகழ் மணி)

பகவானை அடைவதற்கு மார்க்கம் ஏது! பகவானை அடைவதே மானிடப் பிறப்பின் பயன். அடைந்து விட்டால் மறுபடியும் பிறப்பில்லை. நான்தான் எனும் உணர்ச்சி இழந்து விட்டுத் தானே பகவானை அடைய முடியும். நான் தான் இரண்டும் இறந்து விட்டால் மறுபிறப்பு என்று சொல்லுவதற்கு மானிடன் தனது என்று சொல்ல ஜீவாத்மா இல்லை. நான் தான் எனும் உணர்ச்சி இருக்கும்வரையில் உடலிறந்தால் பிறப்பு உண்டு. நான்தான் எனும் உணர்ச்சி இறந்து விட்டால், மானிடனுக்கு இறப்புமில்லை பிறப்புமில்லை. நான்தான் இரண்டும் இறக்கவும், பகவானை அடையவும், ஜீவாத்மா பரமாத்மாவை கூடவும் வகை

அய்யனே வருக அன்னையே வருக
ஆறுமா முகனே ஆண்டவா வருக.

யுண்டோ? ஸ்ரீ கிருஷ்ணன் சுலபமான வழியைச் சொல்கின்றார்.

> "மத்கர்மக்ருன் மத்பரமோ
> மத்பக்தஸ் ஸங்கவர்ஜித:
> நிர்வைரஸ் ஸர்வ பூதேஷு
> யஸ்ஸமா மேதி பாண்டவா"

(அத்தியாயம்-11 ஸ்லோகம்-55)

இந்த உபதேசத்தை யாவரும், த்வைத அத்வைத விசிஷ்டாத்வைத கர்த்தாக்களும் கீதையின் ஸாரமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதன் பொருள் என்ன?

ஐந்து வகையில் வாழ்க்கையை ஒழுங்கு செய்தாலுகில் பகவானை அடைவது திண்ணமாம். முதலில், செய்கின்ற செயல்களெல்லாம் தன் செயல் அல்ல வென்றுணர்ந்து, தெய்வத்தின் கட்டளையாகக் கொள்ள வேண்டும்.

ஈசன் செயலாகக் கருதி, கர்மாக்களைச் செய்ய வேண்டும். செயல்களை ஈசன் உத்தரவுப்படி செய்வதாகச் செய்துவிடில் அதின் புண்ய பாபம், லாபம், நஷ்டம் ஒன்றும் செய்கின்றவனை நாடாதாம். வேலைக்காரன் வேலையை செய்துவிடுவான். அதன் பலன் எஜமானனைச் சேர்ந்தது அல்லவா. ஈசன் நமக்கு எஜமானனென்று கருதி நமது ஆணவப் பற்றின்றி ஆசையின்றி காரியங்களைக் கடமையாகவே செய்தல் வேண்டுமாம்.

இமையோர் ஏத்தும் இறைவா வருக
ஈசானன் சுதா ஈசா வருக.

இரண்டாவதாக நமது எஜமானன் தெய்வம். அது ஒன்றே ஒன்று. எல்லா உலகுக்கும் ஜீவராசிகளுக்கும் இறைவன். மற்றெருவனில்லை. அவர் முதன்மைக்கு இரண்டாவதாகவும் வேறெருவரும் இல்லை என்ற நம்பிக்கை வேண்டுமாம். மூன்றுவதாக அவனிடத்தில் ஆராத காதலுடன் மனதை இறுத்தி அவனை யடையவே பக்தி செய்யவேண்டும். பக்தி யென்பது ஆண்டவனை அடையவேண்டு மென்ற உரம் பாய்ந்த வேட்கைதான். பக்தனுக ஆகவேண்டுமாம். நான்காவதாக, உலகப் பற்றுக்களை யெல்லாம் துறக்க வேண்டும். ஈசன்பற்று முதிர்ந்து விட்டால் உலகப்பற்று உதிர்ந்துவிடும். "பற்றற்றுர் பற்றுகி பற்றி நின்றுண்டி" என்றுர் பட்டினத்தார். "பற்றற்றுருக்கு உரியோனே" என்றுர் அருணகிரி. இதுதான் ஸங்கவர்ஜிதமாம். ஸ்ரமப்பட்டு நாள் முழுதும் வேலை செய்த குதிரையை, ஸ்ரமம் தீர மணலில் கொண்டு போய் களைப்புத் தீர புரள விடுவார்கள். புரண்டெழுந்த குதிரையின் உடம்பிலெல்லாம் மண் ஒட்டிக் கொண்டிருக்கும். குதிரை ஒரு சிலிர்ப்பு சிலிர்த்தால் எல்லா மண் துளிகளும் விழுந்துவிடும். அதுபோல பக்தியினுல் உடலும் ஒரு சிலிர்ப்பு சிலிர்த்தால் வினைகளும் பற்றுகளும் விழுந்துவிடுமாம் என்று உபநிஷத் கூறுகின்றது.

ஐந்தாவதாக, உலகத்தின் காணப்பட்ட ஸர்வ ஜீவராசிகளிடத்திலும் அன்பு வேண்டும். வெறுப்பு

உக்கிர வேலா உமைசுதா வருக
ஊனமில் கருணை உடையாய் வருக.

இருக்கக் கூடாது. இதைத்தான் 'பூததயை' என்றும் சொல்வார்கள். அருணகிரி திருப்புகழில் வேண்டுவதும் இதுவே :

"நீதத் துவமாகி நேமத் துணையாகி
பூததயவான போதைத் தருவாயே"

என்றார். இந்த ஐந்து குணங்களை நன்கே வளர்த்தவன் நிச்சயமாய் எனைவந்து அடைவான் என்றார் கீதையில் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா. ஆகவே தெய்வமே எல்லாவற்றிலும் மேலானதென்றும், உவமையில்லாத தென்றும், ஏகமாய் நிற்கின்ற பரம்பொருள் என்றும், தெய்வ சித்தத்திற்கே அடிமையாகி உழைக்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன், செயல்களை யெல்லாம் ஆண்டவன் ஆணையால் செய்வதாகவே நம்பிச் செய்தும், பக்தியுடனும் அன்புடனும் ஆசாபாசங்களை ஒழித்து,ஜீவராசிகளிடம் அன்பு செலுத்தி அவிரோதத் தன்மை பூண்டு நடிப்பவர்களே திண்ணமாய் ஆண்டவனை அடைவார்களாம். முயற்சித்தால் பலன் பெறலாம் என்பது கீதை.

எங்கும் நிறைந்த எழிலே வருக
ஏதுவே வருக ஏகனே வருக,

உருத்திர பசுபதி நாயனர்

(கி. வா. ஜ.)

சோழவள நாட்டில் திருத்தலையூர் என்பது வளம் செறிந்த ஊர். மறையவர் பலர் அங்கே வாழ்ந்திருந்தனர். வேத வேள்வியை இடையறுது முறைப்படி இயற்றி வந்த தனல் மழை பொழிந்து எங்கும் வளம் பெருகியது. பூம் பொழில்கள் வானுற ஓங்கி வளர்ந்தன. அவற்றில் மலர் கள் விரிந்து தேன் நிரம்பி நின்றன. வீடுதோறும் ஆவினங் கள் மல்கின. இறைவனுக்குப் பஞ்ச கவ்வியங்களும் அளிக்கும் அவற்றைப் போற்றிப் பாதுகாத்தனர் மக்கள். அறமும் நீதியும் சால்பும் அம்மக்களின் உள்ளத்தே நிரம்பி யிருந்தன.

நிலத்தில் வளமும் வீட்டில் வளமும் நெஞ்சில் நற்குண நலமும் மல்கிய அவ்வூரில் பசுபதியார் என்ற மறையவர் வாழ்ந்து வந்தார். வேதத்தை நன்கு பயின்று சிறந்தார். சிவ பக்தியும் நிரம்பியவர். இறைவனுடைய பெருமையைப் பேசும் ஸ்ரீருத்திரத்தை இடைவிடாமல் பாராயணம் செய் யும் ஆர்வமுடையவராகி அப்படியே செய்து வந்தார்.

மறைகள் நான்கு ஆனலும் நான்காவதாகிய அதர்வம் முன்னைய மூன்றனுள்ளும் இருக்கிற பிரயோகங்களைத் தொகுத்து அமைத்ததே. ஆதலின் வேதம் மூன்று என் றும் சொல்வதுண்டு. த்ரயீ என்று வடமொழியில் அதற்கு ஒரு பெயர் வழங்கும். அந்த மூன்றில் நடுநாயகமாக விளங்குவது யஜுர் வேதம். யஜுர் வேதம் பல பகுதிகளை உடையது. நடுப்பகுதியில் இருப்பது ஸ்ரீருத்திரம். சிவ பெருமானுடைய பெருமையைச் சொல்லிப் பாராட்டும்

ஐச்வரியம் எல்லாம் அருள்வோய் வருக
ஒளியே வருக ஒலியே வருக

மந்திரங்களை உடையது அது. வேதமென்னும் திருக்கோயிலில் கர்ப்பக் கிருகத்தைப் போன்றது யஜுர் வேதம். அதன் நடுவில் உள்ள பீடம் போன்றது ஸ்ரீருத்திரம். அதன் நடுவில் இருப்பது திருவைந்தெழுத்து. பீடத்தில் உள்ள சிவலிங்கம் போன்றது அது. ஸ்ரீருத்திரத்தை

"அருமறைப் பய ஞகிய உருத்திரம்"

என்று சேக்கிழார் பாராட்டுவார்.

"வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"

என்று அதிற்பொதிந்துள்ள ஸ்ரீ பஞ்சாட்சரத்தைத் திருஞானசம்பந்தர் வேதத்தின் மெய்ப் பொருள் என்பார்.

பஞ்சாட்சரம் சிவபெருமானுடைய அருளைப் பெறுவதற்குரிய மந்திரம். ஏழு கோடி மகாமந்திரங்களிற் சிறந்தது அது என்பர். அதனைத் தன்னிடத்தே வைத்த பெட்டியைப் போன்றது ஸ்ரீருத்திரம்; அதில் உள்ள நாயக மணி திருவைந்தெழுத்து.

இத்தகைய சிறப்புப் பெற்ற உருத்திரத்தைச் சிவபிரானுக்குத் திருவபிடேகம் செய்கையில் ஓதுவது வழக்கம். அம் மந்திரத்தால் பூரிக்கப் பெறும் புனல் புனிதமடைகிறது.

பசுபதியார் பூம்புனற் பொய்கை சென்று நீராடி விட்டுக் கழுத்தளவு நீரில் நின்றுகொண்டு, உச்சி மேற் கரங்களைக் குவித்து, உள்ளத்தில் சிவபிரானுடைய திருவுருவத்தை நிறுவி ருத்திரத்தைப் பாராயணம் செய்வார். பகல் இரவென்று பாராமல் அதை ஓதுவதையே தவமாகக் கொண்டு ஒழுகினர் அவர். புலனுகர்ச்சிகளில் மனம் செல்

ஓங்கார மூர்த்தி உதாரா வருக
ஔடத கரனே ஆதியே வருக.

லாமல் ஒருமைப் பாட்டோடு ஸ்ரீருத்திரத்தை ஓதியமையால் அவரை உருத்திர பசுபதியார் என்றே யாவரும் வழங்க லாயினர்.

அவருடைய தீவிரமான பக்தியையும் இடைவிடாத ருத்திர பாராயணத்தையும் கண்டு உலகம் வியந்து பாராட்டியது. ருத்திரத்தின் பொருளாக உள்ள இறைவன் திருவுள்ளம் மகிழ்ந்து அவருக்குத் திருவருள் புரிந்து தன்னுடைய திருவடிக் கண்ணே வாழும் பேரின்ப நிலையை வழங்கினன்.

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(சே. த. இராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.)

முன்னுரை:—

எல்லா உலகங்களையும் அவற்றில் உள்ள உயிர்த் திரளையும் ஆக்கி யளித்தருளும் ஆண்டவன் தனக்குச் சொந்தமான சொரூப நிலை என்றும், அருளால் ஏற்கும் தடத்த நிலை என்றும் இருவகை நிலைகளுண்டு. முதல் நிலையில் (சொரூபத்தில்) அவன்,

'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி''

விளங்குவான்.

அந்நிலையில் குறியும் குணமும் கோலமும் தொழிலுமின்றி நிற்றலால் உயிர்களால் அவனை அறிந்து வழிபடல் எளிதல்ல. ஆதலின், அருளே உருவு கொண்டு குறியும், குணமும், கோலமும், தொழிலும் ஏற்கின்றான். இதுவே இரண்டாம் நிலையாகிய தடத்த நிலை எனப்படும்.

"நிறுத்திடும் நிமலமேனி நின்மலன் அருளினலே"
(சித்தியார்)

அவ்வாறு இறைவன் அருளுருக்கொண்ட பின் வீற்றிருந்தருளப் பலவேறு ஆலயங்களும் தலங்களும் எழுந்தன. இவைகள் பலப்பல காரணங் கொண்டு எழுந்தன. அவற்றுள் ஆண்டவன் ஐம்பூதங்களிலும் நீக்கமற நிற்றலேயும், ஐம்பூதங்கள் அவனுணேயில் இயங்கும் அருள் திறனையும் விளக்கவே எழுந்தருளிய தலங்களே 'ஐம்பூதத் தலங்கள்' என்பர் ஆன்றோர்.

அவ்வாறு கூறப்பட்டவை :

1 மண்—(பிருதிவி) தலம்—காஞ்சி, ஆரூர்
2 நீர்—(அப்பு) தலம்—திருஆனேக்கா
3 தீ—(தேயு) தலம்—திருஅண்ணுமலே
4 காற்று—(வாயு) தலம்—திருக்காளத்தி
5 விண்—(ஆகாச) தலம்—சிதம்பரம்

என்பன. ஒவ்வொன்றும் பல அற்புதங்களேயும் அருஞ் சிறப்புக்களேயும் தன்னகத்துக் கொண்டது. அதனே முறையே அறிந்தவாறு மொழிந்து அவ்வத் தலங்களில் நம் அருணகிரிப் பெருந்தகையார் பெற்ற அருளநுபவத்தையும் அவரது திருவாக்கின் உதவி கொண்டு சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். எண்ணிய இச்செயல் எளிதின் முற்றுற, வற்ருக் கருணேபொழி வள்ளிமணுளன், பொற்ருளிணே மலரைப் போற்றுகின்றேன்.

1. காஞ்சிபுரம்:—

ஐம்பூதத் தலங்களில் முதலாவது எனப் பேசப்படும் சிறப்புடையது 'பிருதிவி' என்ற (மண்) பூதத்திற்குரிய தல

விப்பிரர் அன்பே விசுத்தா வருக
முப்புரம் எரித்தோன் முளேயே வருக,

மாகும். இது தொண்டை நாட்டில் உள்ள காஞ்சியம்பதியைக் குறிக்கும். இது, காசி, காஞ்சி, அவந்தி, அயோத்தி, (வட) மதுரை, மாயை, துவாரகை என்ற முத்தி நகரங்கள் ஏழுள் ஒன்ருகும்.

2. பூவிற் சிறந்திடு தாமரை போலவும், புண்ணிய நதிகளிற் கங்கையைப் போலவும், மலையிற் சிறந்திடு தணிகையைப் போலவும், தலத்திற் சிறந்தது காஞ்சியந் தலமே.

"விரையிடங் கொளும் போதினுள் மிக்கபங் கயம்போல்
திரையிடங் கொளும் நதிகளிற் சிறந்த கங்கையைப்போல்
தரையிடங் களிற் சிறந்திடு காசியந் தலமே"

என முருகவேளே வள்ளியம்மையாருக்குத் தணிகைச் சிறப்புக் கூறும்போது எடுத்துரைக்கின்ருர்.

3. இந்நகர் கலியினுல் வரும் துன்பங்களை ஒழிக்கவே சிவனுர் படைத்தது எனப்படுகிறது.

4. இது பம்பை, கம்பை, புண்ணிய நதி, மஞ்சள் நதி, வேகவதி, பாலிநதி, சேய்நதியான ஏழு நதிகள் பாய்ந்து ஏழுலகமும் புகழும் வளத்தோடமைந்தது.

5. நகர அமைப்பிலும் காஞ்சி சிறந்து விளங்கியதை "நகரேஷு காஞ்சி" என்ற வடமொழி வல்லுநர் வாக்கும் வலியுறுத்துவதாகும்.

பெயர்க் காரணம்:—

1 க+அஞ்ச் எனப் பிரித்து 'க' (பிரமனுல்)+அஞ்ச் (பூசிக்கப்பட்டது) ஆதலால் காஞ்சி என்ற பேரும், இவ்வூர் அதனுல் பிரமலோகம் என்றும் காஞ்சிப் புராணம் கூறுகிறது.

சரவண பவசிவ சாமீ வருக
வரகுண வாரிதி வடிவே வருக.

"மடமயிலே! 'கவ்'வென்பதயன் பேரென்ன
முந்தும் இருக்கோதும் 'அஞ்'சென்பகுதி அடைவொடு
பூசை மொழியும் மாதோ"
"திசைமுகனல் அஞ்சிக்கப் படுதலினல் காஞ்சியெனத்
திசைபோய்மல்கும்
இசையுடையதிது 'பிரமலோகம்' என்றும் இதனற்பேர்
எய்தும்"

2 க+அஞ்ச்=திருமால்+பூசை செய்தது என்பர்;

3 காஞ்சி—சுக்கிரன் பூசித்தது.

4 காஞ்சி என்பது துறவொழுக்கம். இது மிகவுடைய துறந்த பெரியோர் வாழ்ந்த இடம் எனவும் கூறுவர்.

சிறப்புக்கள்:—

ஒரு சமயம் சீரார் சிவபுரத்தில் நவமணிப் பதித்த பொன்மயமான மண்டபத்தில் அழகிய அரியாதனத்தில் உமையொரு பாகனுய் ஒப்பிலாக் கடவுளாம் சிவபிரானுர் திருவோலக்கங் கொண்டிருந்தார். அப்போது உமையம்மை எழுந்து அரனுரின் அடியிணைகளைக் கைதொழுது, "அண்ணலே! முத்திப்பேறு உமது திருவடி தெரிசனத்தாலேயே சித்திப்பது. அத்தெரிசனம் நான்மறை யாறங்கமுதல் கற்றுத் தேர்ந்த தவஞான யோகிகட்கே கிட்டும். ஏனைய உயிர்கட்கும் அஃது எய்தும் முறை எது ?" என வினவினுர்.

சிவனுரும், "தேவி! நாம் மண்ணுலகு முதல் மேலுலகனைத்திலும் நிறைந்து நிற்பதை எவரும் அறியமாட்டார்கள். ஆயினும் திருச்சேது, ஆலவாய் முதலிய தலங்களில் எல்லோரும் காணுமாறு எழுந்தருளி யிருப்போம். அவற்றில் "புண்ணியமெய்த் திருக்காஞ்சி எவற்றினும் மேம்படு

சுரகுண சுககர சுந்தரா வருக
மரகத வடிவேல் மார்பா வருக.

புரியாம் அவ்வூர் தன்னே; எண்ணினும் கேட்பினும் சொலி னும் வணங்கினும் பேரின்ப வீடு எவர்க்கும் நல்கும்; அப் பதியில் எஞ்ஞான்றும் மகிழ் கூர்ந்து நின்னெடு நாம் அமர் வோம்'' என்று அருளினர் என்பதால், சிவனுர் தேவியுடன் நீங்காதுறையும் நீணகர் காஞ்சி யென்பதறிகிறேம்.

இத் தலத்தில் சமய சமரசங் காட்டுமாப்போல் ஐந்து கோட்டங்களுள. சிவன் கோட்டம் (ஏகம்பர் கோவில்), காமகோட்டம் (தேவி கோவில்), குமரகோட்டம் (முருகன் கோவில்), புத்த கோட்டம் (புத்த விகாரம்), அருகக் கோட்டம் (அருகன் பள்ளி) என்பன. திருமாலுக் கென்றே அத்திகிரி முதலிய ஆலயங்களுமுண்டு.

மேலும் இங்குப் பல்லவர் காலச் சிற்பச் சின்னங்க ளான கயிலாசநாதர் கோவில், உலகளந்த பெருமாள் கோவில் முதலியன உண்டு; இங்கே ஆதி சங்கரரும், இராமாநுஜரும் வாதம் புரிந்ததும் உண்டு என்பர்.

தெய்வப் பொதுமறையான திருக்குறளுக்கு உரை வகுத்த பத்து ஆசிரியர்களில் முதலிடம் பெறத்தக்க பரிமே லழகர் வாழ்ந்ததும் காஞ்சியாகும்.

நமது சைவ நாயன்மார்கள் அறுபான் மும்மையரில் ஒருவராய ஐயடிகள் காடவர்கோன் நாயனுர் ஆட்சி புரிந்த சிறப்பும் உண்டு. இவர் தாம் சிதம்பர முதலிய சிவத்தலங் களே வழிபட்டும், திருப்பணி செய்தும், க்ஷேத்திர வெண்பா என்ற அரிய நூலே இயற்றிப் புகழ் கொண்டார். இவரது நூல் சைவத் திருமுறை வரிசையில் பதினேராவதில் சேர்க் கப்பட்டுள்ளது.

திருவொற்றியூரில் நலங்கிளரும் சங்கிலி நாச்சியாரை மணக்கும்போது கூறிய உறுதி தவறி அவ்வூரெல்லையைக் கடந்ததும் இரு கண் நோக்கும் இழந்த சுந்தரர் இத்தலத்

நாதா வருக நண்பே வருக
போதா வருக புனிதா வருக

தில் வந்துதான் இடக்கண் பார்வை பெற்றனர். இவரது பாடல் இத்தலத்துக்கு உள்ளது போலவே, ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசுகளும், பரணதேவரும், பட்டினத்தடிகளும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். சைவ நாயன்மார்களில் திருக்குறிப்புத் தொண்டரும், கல்லெறிந்த சாக்கிய நாயனாரும் முத்திப்பேறு பெற்ற முதுநகராகும். கச்சியப்பர் கந்தபுராணம் இயற்றியது:—

காஞ்சிக் குமரகோட்டத்துப் பெருமானை முப்போதும் திருமேனி தீண்டி வழிபடும் காளத்தியப்ப சிவாசாரியார் என்பவரது திருக்குமாரர் கச்சியப்பர். இவர் ஆரியத்தொடு அருந்தமிழ்க் கடல் கரை கண்டவர். கந்தக் கடவுள்பால் மாறுநேயம் மலிந்த சிந்தையர். ஓரிரவு முருகவேள் இவரது கனவில் எழுந்தருளிப் பணித்தவாறே வடமொழிக் காந்தத்தைத் தமிழில் இயற்றப் புகுந்து, செவ்வேள் 'திகட சக்கரச் செம்முக மைந்துளான்' என உதவியருளிய அடிபற்றிப் பாடி முடித்தனர்.

அதனை அரங்கேற்றும்போது 'திகட சக்கர' என்ற அடியில் ஒரு புலவர் காட்டிய ஐயப்பாட்டை, மறுநாள் செந்தமிழ்த் தெய்வமே புலவர் உருவில் போந்து ஆதாரங் காட்டி நீக்கி யருளியதென்பர். இம்மாபெரும் தெய்வ நிகழ்ச்சியை அருணகிரி வள்ளலும்,

"மருவு புலவனர் கவிக்கு ளேசிறு
வழுவதறை மகா சபைக்கு ளேகியே
வகைபெயரதா இலக்கணவிதி மொழிவோனே"

என்றும்,

"முற்பட்ட இலக்கண நூலிடை
தப்புற்ற கவிக்கென வேஅவை

வேதா வருக வேலா வருக
தாதா வருக தவமே வருக.

முற்பட்டுப் புதுத்துறை மாறிய—புலவோனே"

(திருப்)

எனவும் பாராட்டியுள்ளனர்.

இப்படிப் பல்வேறு சிறப்பமைந்த இப்பழம்பதியில் அருணகிரியண்ணலார் எழுந்தருளிப் பல் திருப்புகழ்ப் பாடியுள்ளனர். அவர் இத்தலத்தைப்பற்றிக் கூறிய குறிப்புக்களை அடுத்த இதழில் ஆராய்வோமாக.

[தொடரும்]

கடமையும் உரிமையும்

(V. R. G.)

மனிதனின் பிறப்புரிமையைப் பற்றி எங்கும் பேசப்படுகிறது. தனிமனிதனின் உரிமையில் எவரும் கைவைக்க விடோம் எனக் கோஷங்கள் முழங்குகின்றன! உரிமை என்பதைக் கேட்டதுமே நம் மனம் அதில் நாடுகிறது! அந்த உரிமை என்பதுதான் என்ன?

நம் மனப்படி சுயேச்சையாய் நடப்பது உரிமையாகுமா? இல்லை. ஒருக்காலும் இல்லை. உரிமை எனும் பிரச்னை எழும் பொழுதே கடமை எனும் விஷயமும் கூடவே உண்டாகிறது. கடமையும் உரிமையும் மனிதன் உடலும், உயிரும்போல் ஒன்றுயுள்ளன. அதைப் பிரிக்க முடியாது. கடமையின்றி உரிமையில்லை, கடமையை உணராதவன் உரிமையை அறியாதவனுகிருன். உரிமையைக் கோரத் தகுதியற்றவனுகிருன். தன் கடமையை நன்கு உணர்ந்து அதை விரும்பிச் செய்பவனிடம் உரிமை தானுகவே வந்தடையும்! இளமைப்பருவத்தில் நல்லறிவைப் புகட்டும் கல்விகற்று அறிவு முதிர்ச்சியடைந்தவனே, தன்

வறுமை நீக்கும் வள்ளலே வருக

குறுமுனிக்கு அருளிய குழகா வருக.

கடமை யாதென உணர்ந்து அதன் வழி நடந்து கீர்த்தி பெறுவான். அவன் தன் உரிமையைப் பற்றிச் சிறிதும் விரும்பாதவனு யிருப்பினும் உரிமையானது அவனைச் சதா சூழ்ந்து நிற்கும் ஏவலாளாகும்.

மனிதனின் அறிவு அவன் கடமையையே விரும்பி நாடும். மனமோ, உரிமையிலே மோகம் கொண்டதாயிருக்கும். அறிவோ கடமையின் உயர்வையும் அதனால் வரும் நீடித்த நன்மையையும் நன்குஉணர்ந்து அதிலேயே நாட்டங் கொண்டதா யிருக்கும். கடமையே கடவுளின் வடிவாய் விளங்குவது. கடமையைச் செய்பவன் கடவுளின் ஆப்த நண்பனுகிறுன். கடமையே கடவுளைக் காட்டவல்லது. கடமையே கடவுள்!

மனதிற்கு தீர்க்க யோசனை செய்து வரும் பலாபலன்களை அறிந்து ஒருகாரியத்தைச் சாவதானமாய்ச் செய்வது என்பது இயலாததாகும். எதிலும் அவசரந்தான். நாளைக்கு வரக்கூடியதைச் சிறிதும் சிந்தியாது கண்டதே காக்ஷி கொண்டதே கோலம், தான் நினைப்பதே சரியென எண்ணிச் செயலில் லிறங்கிவிடும். கடமையென்பதைக் கேட்டாலே அதற்கு வேம்பாய்க் கசக்கும். தன் உரிமை சிறிதாயினும் அதைப் பதின்மடங்காய் நினைந்து அதிலேயே தன் கவனம் பூராவும் செலுத்தும். உரிமையை அனுபவிக்கவே கடவுள் நம்மைப் படைத்திருக்கிருர் எனக்கூறும். உரிமையில் மோகம் ஏறஏற, மனிதசுபாவமாகிய பொறுமை, அடக்கம், தயை, மனசாக்ஷியாகிய நற்குணங்கள் யாவும் மறைந்து நான், எனது எனும் தீமை இருள் சூழ்ந்து கொள்ளும்.

தன் கடமைகளுக்கும் பிறர் உரிமைகளுக்கும் இடையூறு வராமல் ஒருவன் மேற்கொள்ளும் உரிமையே உண்மை

குறமகள் கொழுநா குகனே வருக
அறத்தின் வடிவே அருளே வருக.

உரிமையாகும். கடவுள் நம்மைப் படைக்கும் பொழுதே நமக்குள்ள கடமையையும் உரிமையையும் நிர்ணயித்திருக்கிறார். நாம் விரும்பினாலும் விரும்பாவிடினும் ஞாயமான உரிமைகள் நம்மை வந்தடையவே செய்யும். ஆண்மை, பலம், ஆரோக்கியம், யௌவனம், தயை, பகுத்தறிவு யாவும் ஆண்டவன் நமக்கெனவே உவந்தளித்த உரிமைகளாகும். இவைகளின் உதவியைக் கொண்டு நாம் இன்னும் பன்மடங்கு உரிமைகளை எளிதில் அடையலாம்.

அறிவு முதிர்ச்சி பெற்றவனே தன் கடமை உரிமைகளை நிர்ணயித்துக் கொள்ள முடியும். அறிவு விசாலமடையத் தகுந்த காலம் இளமைப் பருவமே. அப்பருவத்தில் அறிவின் வளர்ச்சியைப் பெருதவன் அவன் வாழ்க்கையில் எவ்வித லக்ஷியத்தையும் அடைய முடியாதவனாகிறான். "இளமையிற் கல்" "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" இவை ஆன்றோர் வாக்கு.

மனிதனின் வாழ்நாள் மிக விலையுயர்ந்தது. அதிலும் அவன் இளமைப் பருவம் விலை மதிப்பிட முடியாத உயர் பொருளாகும். அதைப் பயன்பெறச் செய்வதைப் பொறுத்தே ஒருவனுடைய, அல்லது ஒரு தேசத்தினுடைய சுபிக்ஷ வாழ்வு இருக்கிறது.

இளமைப் பருவத்தை வீணாக விடாமல் பயனுறச் செய்யும் பொறுப்பு பூராவும் பெற்றோர்களையே சார்ந்ததாகும். பெற்றோர்கள் தங்கள் சிறுவர் சிறுமிகளைத் தக்க வயதில் பள்ளிக்கனுப்ப வேண்டும். அவர்கள் எண்ணமும், வாக்கும், செயலும் நல்வழியிலேயே பதியும் வண்ணம் அவர்கள் சேர்க்கையும் சூழ்நிலையும் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் நம் முக்கிய கடமையாகும். பள்ளிக்கு அனுப்புவதோடு நம் பொறுப்பு தீர்ந்துவிட்டதாய்

துட்ட சங்காரத் துரந்தரா வருக
சிட்டர்தம் துன்பம் தீர்ப்போய் வருக.

எண்ணிவிடக் கூடாது. சிறுவயதில் அவர்கள் உள்ளத்தில் எவ்விஷயமும் சீக்கிரமாகவும் ஆழமாகவும் பதிந்துவிடும். ஆதலால் தூய்மை, நற்குணம், தன்னம்பிக்கை, ஊக்கம் முதலிய நல்ல பழக்கங்கள் ஏற்படும் வண்ணம் நல்ல தோழர்களுடனே பழகவிட வேண்டும். இவ்வாறு இளமைப் பருவத்திலேயே தம் மக்களுக்கு நல்லொழுக்கமும், புத்திக் கூர்மையும், அறிவு முதிர்ச்சியும் உண்டாகும் வண்ணம் பெற்றோர்கள் செய்துவிடுவார்களாயின், அவர்கள் தங்கள் அரும்பெருங் "கடமை"யைச் செய்தவர்களாவார்கள். நம்மைப் படைத்து ரக்ஷித்து வரும் முழுமுதற் கடவுளாகிய திருமுருகனின் பூரண கருணைக்கும் பாத்திரமாவார்கள்!

மனிதனுடைய வாழ்நாளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது கல்வி கற்று அறிவு முதிர்ச்சியடையும் காலம். இந்தப் பருவத்தில் நம்முடன் ஜனித்த சர்வ வல்லமையுள்ள மனம் எனும் வீரனானவன் சிறு குழந்தையாயிருக்கிறான். அச்சமயம் அவனுக்கு அதிகம் சேஷ்டைகள் செய்ய சக்தி கிடையாது! அறிவு யாதொரு இடையூறுமின்றி கல்வி பயிலக்கூடிய காலம் அதுவே. அச்சமயம் தப்பினால் எச்சமயமும் வாய்க்காது. அறிவின் பலத்தைச் சோதிப்பதற்கென்றே அவன் பிறந்தவனாதலால் அவனிடம் நாம் மிக உஷாராயிருக்க வேண்டும். அவன் யௌவனப் பருவத்தை அடையு முன்னமேயே நாம் நம் அறிவை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படி அடைந்தால்தான், மனம் பூரண பலமடைந்து ஆக்ஷிபுரியும் சமயம் அவனை நயத்திலும், பயத்திலும், திருத்தி நல்வழிப் படுத்தி நம் வாழ்க்கையின் பயனை அடைய முடியும். இப் பருவத்தைக் **கல்விப் பருவம்** எனலாம்.

கட்ட நிவாரணக் கந்தா வருக
அட்ட சித்திகள் அருள்வோய் வருக.

இரண்டாவது யௌவன திசைக்கு செயல்புரி பருவம் எனக் கூறலாம். தன் விடா முயற்சியாலும் நற்செயல்களாலும், அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றுவித உரிமைகளையும் அடைந்து இன்புறும் காலமாகும்.

மூன்றுவது "ஓய்வுபெறுபருவம்" என்பது பொருந்தும். இதுவரை ஓயாமல் உழைத்ததாலும் வயதாகிவிட்டதாலும் சரீரம் வலிமை யிழந்து செயல்புரிய சக்தியற்றதாகிறது. அத்தருணத்தில் அவன் சிந்தனை சக்தியொன்றே செயல் புரிய உதவியாயிருக்கும். ஆதலால் அப்பருவத்தைச் சிறிதும் வீணுக்காமல், சதா "திருமுருகன்" வழிபாட்டிலும் செலவிட வேண்டும். கிடைத்தற்கரிய உயர்ந்த மானிடப் பிறவியை நமக்கு உவந்தளித்து, நாம் நம் கடமைகளைச் செய்து வாழ்க்கையில் வெற்றிபெற, துணையாயிருந்து பேருதவி புரிந்த திருக்குமரனுக்கு நம் அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்து, அவன் நாமத்தை மறவாதிருக்க வேண்டும். இவையே நாம் வயது காலத்தில் செய்யவேண்டிய கடமைகளாகும்.

தங்கள் கடமைகளைச் செய்த பெற்றோர்களே, அவர்களின் வயது காலத்தில் தங்கள் மைந்தர்களிடமிருந்து சகல உரிமைகளையும் ஆதரவையும் பெறுவார்கள். தாய் தந்தையர்களின் முதுமைப் பருவத்தில் அவர்களை நன்கு ஆதரித்துத் தன் கடமையை நிறைவேற்றிய புத்திரனே அவன் வயது காலத்தில் அதைத் திரும்ப அடைகிறுன்.

நாம் செய்த "கடமை"களே "உரிமை"களாக மாறி திரும்பவும் நம்மை வந்தடைகின்றன.

பக்தர் துயரம் பறக்கச் செய்யும்
உத்தம சீலா உம்பர் தலைவா.

தூயமென்பார் தொழில்

(வா. இராமலிங்கம்பிள்ளை)

'தூய்மை' என்பது புறத் தூய்மை, அகத் தூய்மை என இரு வகைப்படும். புறத் தூய்மை, கடவுட் படைப்பில் நல்வினைப் பயனால் நன்மை தீமை பிரித்துணரும் அறிவு திகழும் மனித உடல் பெற்ற நம் வாழ்க்கையில், நாளும் உடல்நலம் பெற்றிருத்தற் பொருட்டு, உடலுறுப்புக்களில் மாசு அடையாதபடியும், உடையும் அழுக்கற்றிருக்கும்படி கவனிப்பதோடு, உண்ணும் உணவு சுத்தமுடையதாகவும் கவனிக்கவேண்டியது இன்றியமையாத கடமையாகும். இதனைத் திருவள்ளுவர் "புறந்தூய்மை நீரானமையும்" என இனிது கூறியருளினர். "கூழானாலும் குளித்துக்குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்பனவும் முன்னோர் மொழிந்த இன்னுரையாகும்.

இக்காலத்திய வைத்திய நிபுணர்களும் இதனையே வற்புறுத்தி, இருக்கும் இடம், உடுக்கும் உடை, உட்கொள்ளும் உணவு ஆகியவை சுத்தமாயிருக்கக் கவனஞ்செலுத்த வேண்டும் என வற்புறுத்திக் கூறுவது காண்கிறோம். எனவே, நீரிற் குளித்து, சீரிய உடையணிந்து, செவ்வையாய் உணவும் கொண்டால் ஒருவாறு வள்ளுவர் மொழிக் கேற்பப் புறத் தூய்மை தானே அமையும். இவை அமையப் பெற்றால் சிறிது நோயற்ற வாழ்வையும் பெறலாம்.

புற அழுக்கை அகற்ற அகற்ற, அகத்து அழுக்கான தீய குணங்களும் சிறிது சிறிதாக விலக நேரிடும். புறச் சுத்தம் அமைந்து அத்தகைய சுத்தமான இன்பத்துட

சுத்த மெய்ஞ் ஞானச் சொரூபா வருக
சத்திவேல் குமர சாமியே வருக.

னேயே பழகிவரக் கெடுமதி தோன்றுதாகி, கேடுதருஞ் செயல்களினும் விலகிவிடத்தக்க உள்ளத் தூய்மை வாய்க்கும். அது வாய்த்து வளர்ந்தபோது, வாய்மையில் படரும் சத்தியநிலை சாரும். இதனை வள்ளுவப் பெருந்தகையார்

"அகத்தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்றார்.

புறத்தூய்மை நீரானமையும் என்றவர், அகத்தூய்மையைச் சொல்லுமிடத்து அதுபோல் அமையும் என்று கூறுது, அதன் ஏற்றம் தொனிக்க "வாய்மையாற் காணப்படும்" என இசைத்தனர்.

இதனால் அகத் தூய்மை என்பது வாய்மையே என்பது தெளிவு. வாய்மை என்னென நோக்குங்கால் வள்ளுவர் வாய்மொழியே அதற்குத் தெளிவுரையாக,

"வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்"

என வாய்மையின் இலக்கணம் விளங்கச் செய்தது காண்கிறோம்.

எனவே தீயன உள்ளத்தால் உள்ளலும் தீதேயாகையால், உள்ளத்து உதித்தாலன்றி வாய் நவில வாராதென்பது தேற்ற "தீமையிலாத சொலல்" என்றனர். தீயன உள்ளத்து உள்ளுதலும் உரையால் நவிலுதலும் இல்லையாம்பொழுது, கொள்ளும் செயற்பாடு கூடுவதுமில்லையாம். இனி வாய்மையுடையார் செயல் யாதெனின், உண்மையே பேசுதல், வழக்குகளில் எவ்வித பாரபட்சமான சார்புமின்றி நடுவு நிலைமை கொண்டு உண்மைக்கு

உயர்வு கொடுத்துப் பேசுதல் என்ற தன்மையில், தன்னுயிர் கிறுதி நேரிடுமாயினும் சான்ருண்மையாம் சால்பில் நின்றும் பிறழாத நேர்மையுடைமை என்பனவாம். இது குறித்துத் திருவள்ளுவர்,

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி"

என்றருளினர்.

ஓதாதுணர்ந்த மூதாட்டியாரும்,ஒருபாற் கோடி வழக்குரைப்பார் எய்தும் பயன் இன்னதென,

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னர் மனை"

என அறிவுறுத்தியுள்ளார்.

இக்காலம் பதவிக்கோ, பணத்துக்கோ, புகழெனக் கருதும் புன்மை எழிலுக்கோ ஆசைப்பட்டு, தன்னிலை தவறி, அன்னியர் சூட்சி வசப்பட்டு, இன்னல் தருவன வற்றை ஏற்றமாக முனைந்து செய்து மகிழுவோர் இவற்றைச் சிந்தித்துணர்ந்து வாய்மையிற் பொருந்த வேண்டும். இவை யனைத்தையும் ஒருங்குணர கீழ்க்கண்ட திரிகடுக வெண்பா நாடியுணரும் பண்புடையதாகும்.

"உண்பொழுது நீராடி யுண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினும் சான்ருண்மை இன்றைமை இம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில்.

உன் திருத் தாளை உளமதில் வைப்போர்க்கு
என்றும் அபயம் ஈவோய் வருக.

சிவபிரான் இடையனுய் வந்த திருவிளையாடல்

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை)

தென்னுடுடைய சிவன் - சோமசுந்தரப் பெருமானுர் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் புரிந்தனர். அத் திருவிளையாடல்கள் செந்தமிழ் இலக்கியத்துக்கும் இலக்கணத்துக்கும் எடுத்துக் காட்டாக நற்றமிழ்ப் புலவர்களாற் பெரிதும் பாராட்டப்படும் திருவிளையாடற் புராணத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள. அந்தப் புராணம் பரஞ்சோதி முனிவர் பாடினது. அதிற் கூறப்படாத ஓர் அருமைத் திருவிளையாடற் சரிதம் "பழைய திருவிளையாடல்" எனப் பெயர் வழங்கும் "திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்திற்" கூறப்பட்டுள்ளது. சிவநேசச் செல்வர்கள் அதைப் படித்து இன்புற வேண்டி அதை இங்கு எழுதலாயினேன். அது அப்பழைய திருவிளையாடல் புராணத்தில் "காரியார் நாரியார் பாப்பகுத்த திருவிளையாடல்" என்னும் பெயருடன் 52-ஆவது திருவிளையாடலாக விளங்குகின்றது. அச்சரித்திரம் வருமாறு:—

வடநாட்டில் **காரியார், நாரியார்** எனப் பெயர் பெற்ற இரண்டு புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் அற்புதமாகப் பாடவல்லவர்கள். அவர்கள் பாண்டியனைச் சிறப்பித்து கவிகள் பாடி அவைதமைப் பாண்டியனிடம் காட்டிப் பரிசு பெற வேண்டி மதுரை நோக்கி வழி நடந்து வந்தார்கள். வந்தவர்கள் வழி தெரியாது மயங்கி ஒரு காட்டிடையே அகப்பட்டு மதுரைக்கு வழி எதுவோ எனத் திகைத்தார்கள். அப்போது மதுரை நாயகர்—'செந்தமிழ்ப் பிரியராம் சொக்க நாதர்' பசுக்களை மேய்க்கும் ஓர் இடைய

பிணிகள் நீக்கும் பிரபோ வருக
பணியும் அநாதிப் பாலகா வருக.

ஞகை அவர்கள் எதிரே தோன்றினர். ஒரு துணையைக் கண்டோமே என மகிழ்ந்த அந்தப் புலவர்கள் அந்த இடையனை அணுகினர்கள். இடையனோ பாசிமணி கழுத்திலும், திரு நீறு நெற்றியிலும், தண்டொன்று பக்கத்திலும் கொண்டவனாய் புல்லாங்குழல் ஊதிக்கொண்டு இசை வெள்ளத்தில் இனிதமிழ்ந்திருந்தனன். அவனது கோலத்தைக்கண்ட புலவர்கள் ஓர் அதிசய உணர்ச்சியுடன் 'அப்பா! மதுரை ஊருக்குப் போகும் வழி எது' என அவனை வினவினர்கள். வெற்றிப் பதக்கங்கள் முதலிய பல சிறப்படையாளங்கள் அப்புலவர்களின் உடலில் விளங்கக் கண்ட அந்த இடையன், "என்ன" நீங்கள் புலவர்களோ! பல சிறப்பும் சின்னங்களுடன் வந்துள்ளீர்களே! உங்களுக்கு மதுரையில் ஆகவேண்டிய காரியம் என்ன?' என்று கேட்டான். அதற்குப் புலவர்கள் 'ஏய்! நாங்கள் வந்த காரியம் உனக்குச் சொல்லும் தகைமைய தன்று; நீ எங்களுக்கு மதுரைக்குப் போம் வழியைச் சொல்' என அதிகாரத்துடன் கேட்டார்கள். இதைக் கேட்ட இடையன் "வழி சொல்ல மாட்டேன்" என்று நறுக்கெனப் பதில் உரைத்துச் சிரித்தான். பாவம்! புலவர்கள் வேறு வழியில்லை என உணர்ந்து, வந்த காரியம் நிறைவேற வேண்டுமே எனக் கருதி, "அப்பா! நாங்கள் மதுரைப் பாண்டியன் மீது கவி பாடி வந்துள்ளோம்" என்றார்கள். அதற்கு இடையன் "ஐயோ! மதுரை பெரும்புலவர்கள் இருக்கின்ற இடமாயிற்றே. அதைமதியாது, நாணமின்றி கவி பாடி வந்துள்ளோம் என்கிறீர்களே! உங்கள் புலமையின் அளவு கிடக்கட்டும்; எதோ? அந்தக் கவிகளில் ஒரு கவி சொல்லுங்கள் பார்க்கலாம் என்றான். 'ஏது, இந்த இடையன் கலைஞானம் உள்ளவன் போலும்;

தணிகா சலனே தயாநிதே வருக
மணிகணம் அணிந்த மார்பா வருக.

அதிக விஷமனா யிருக்கின்றான். நமது பாடல்களில் ஒன்றைப் பாடிக் காட்டினாலொழிய இவன் மதுரைக்கு வழி கூற மாட்டான் போலும்' எனப் புலவர்கள் சிந்தித்துத் தாங்கள் பாடி வந்த பாடல்களில் ஒரு பாட்டைச் சொன்னார்கள். அந்தப் பாட்டைக் கேட்டவுடன் இடையன் “போதும், போதும், அழகாய் உளது உங்கள் பாட்டு!” என்று கூறி தொடை தட்டிச் சிரித்து, “இந்தக் கவியையா சொல்லப் போகின்றீர்கள்; அட, அப்பாவிகளே! இந்தப் பாட்டு யாருக்குத்தான் தெரியாது! மாடு மேய்ப்பவர்கள் கூட இங்கு இந்தப் பாடல்களைப் பாடுவார்களே! நான் சொல்லுகிறேன் பாருங்கள்” என்று சொல்லி அவர்கள் பாடி வந்த பாடல்கள் முழுமையும் மடமட என்று ஒப்பித்தான். புலவர்கள் விழிவிழி என்று விழித்தார்கள்; துணுக்குற்றார்கள்; அதிசயித்தார்கள்; உடல் வியர்த்தார்கள். இவன் நாட்டிடையன் அன்று; இவன் ஒரு அதிசய ஆத்மா என வியப்புற்று அவனை நோக்கி ‘அப்பா! நீ நல்ல அழகுள்ளவனாய் இருக்கின்றாய்! நான் மறைகளாலும் சொல்ல முடியாத அப் பெருமானால் அல்லது வேறொருவராலும் உன்னைப் போலச் சொல்ல முடியாது; நீ யார்? உனக்கு இந்த ஆற்றல் எவ்வாறு வந்தது? நீ உண்மையைச் சொன்னால் அரசன் எங்களுக்குக் கொடுக்கும் பொருள் அனைத்தையும் உனக்கே தருகிறோம்' என்றார்கள். அதற்கு இடையன்—

‘‘மட்டவிழ்பூம் பொழில்புடைசூழ் மாமதுரை யூர்ப் [1]பொதுவன்
சிட்டர்புகழ் தரும் [2]அண்டன் [3]சிற்றிடைச்சி மணவாளன்
[4]விட்ட பசு [5]முட்டாமல் மேய்த்தடக்கிப் [6]பாசத்தாற்
கட்டிவிடு [7]மன்றாடி [8]கால்மாறி யாடுவேன்.

உரை :—

* 1. பொதுவன் - ஊர்ப் பொதுவில் உள்ளவன்; பொது - சபை; மதுரை வெள்ளியம்பலத்தில் உள்ளவன்; 2. அண்டன் - தேவன்; 3. சிறிய இடையை உடைய உமாதேவியார்; 4. பசு - உயிர்கள்; 5. முட்டாமல் - குறையாமல்; 6. பாசம் - ஆணவ முதலிய மலங்கள்; 7. மன்றாடி - சபையில் ஆடுபவன். 8. கால்மாறி ஆடின திருவிளையாடலைச் செய்தவன்.

வெளிப்பொருள் :—

பொதுவன் - இடையன்; 2. அண்டன் - இடையன்; 3. சிறிய இடைச்சாதிப் பெண்; 4. பசு - பசுமாடுகள்; 5. முட்டாமல் - முட்டுதல் செய்யாமல்; 6. பாசம் - கயிறு. 7. மன்றாடி - எரு மன்றத்தில் ஆடுபவன்; 8. கால் மாறி நிற்கும் இடையன்.

பெரும் பொருளின் ஆசையிலே பெயர்பெரிய சொக்கக்கோன்
பரிந்திடுநுங் கவிதைகளிற் பாதி பகுந் தின்றென்மேல்
திருந்தஙவின் றிடுவீரேல் சேர்ந்தவழி யானுமக்குப்
பொருந்த உரை செய்வல்"—

அதாவது நான் மதுரை இடையன்; ஒரு சிற்றிடைச்சி கணவன்; பசு முட்டாமல் மேய்த் தடக்கிப் பாசத்தாற் கட்டுபவன்; கால் மாறி நிற்பவன்; எனக்குப் பொருளாசை கிடையாது; என் பெயர் 'சொக்கக்கோன்' என்று (வெளிப் பொருளும் உட்பொருளும் படப்) பதில் உரைத்து, 'நீங்கள் பாடியுள்ள பாடல்களில் பாதி பங்கிட்டு என்மீது அப் பாடல்களைத் திருந்த அமைப்பீர்களானால், மதுரை சேரும் வழியை உங்களுக்குக் காட்டுவேன்' என்றான். புலவர்களும் 'நன்று அப்படியே செய்கிறோம்' என்றார்கள். இடையனும் மதுரைக்குப் போகவேண்டிய வழியை விளங்கக் கூறி உடனே மறைந்தனன். புலவர்கள் "ஹா! ஹா! நம்முன் இடையனாய் நின்றவன் சிவபிரானே! சொக்கமூர்த்தியே" எனத் தேர்ந்து வியந்து மதுரை சேர்ந்து, உடனே திருக் கோயிலுக்குச் சென்று சொக்கநாதப் பெருமான்மீது அன்பு பொங்கும் மனத்தினராய்த், தாங்கள் பாடி வந்த பாடல் களில் பாதி பெருமானுக்கு ஆம்படிப் பகுந்து திருத்தித் தமிழ்மாலை சாத்தி மகிழ்ந்தார்கள்; பின்பு இறைவனிடம் விடைபெற்றுச் சென்று, பாவலர்கள் மற்றைய பாதி கொண்டு பாண்டியனைக் கண்டார்கள்; அவன் தந்த சிறப் புக்களைப் பெற்றுக் களிப்புற்று தங்கள் நாடுபோய்ச் சேர்ந்தார்கள்.

பன்னிரு கரனே பரனே வருக
வன்னி சம்பவா வரதா வருக.

*ஆரியார் செந்தமிழ் பாடுவர் என்றலே கின்றனை ஐயகோ! அன்றொருநாள்
†ஓரியார் காட்டிடை மாடுமேய்ப் போனென நின்‡றதர் காட்டென உன்னைவேண்டும்
காரியார் நாரியார் பாக்களிற் பாதியே போதுமென் றேற்றளங் கண்ணுதலே!
நாரியார் பங்கனே! நான்சொலும் பாஎலாம் உன்னதே ஏற்றருள் நம்ப! நீயே.

பார் பூத்த வல்லி

[கு. நடேச கவுண்டர்]

எல்லாம் வல்ல இறைவனது திருவருட் சக்தியைப் பெண்ணாக வினைத்துக் கூறி வழிபடுதல் வேத காலம் தொட்டு இந்நாள் வரையில் வழக்கத்தில் உள்ளது. நீரில் தண்மையும் நெருப்பில் வெம்மையும் மலரில் மணமும் முதலியனவாக இறைவனுக்கும் அவனது சக்திக்கும் உவமை கூறுவர் சான்றோர். திருமண வேளையில் சிவபெருமானும் தடாதகைப் பிராட்டியும் ஒருவருக்கொருவர் அருகில் வீற்றிருந்த கோலத்தை,

"பண்ணும் இன்இசையும், நீரும்தண்மையும், பாலும் பாலில்
நண்ணும் இன் சுவையும், பூவும் நாற்றமும், மணியும் அங்கேழ்
வண்ணமும், வேறுவேறு வடிவு கொண்டு இருந்தால் ஒத்தது
அண்ணலும் உலகமீன்ற அம்மையும் இருந்தது; அம்மா"

---

* ஆர் - யார்; † ஓரி - நரி; ‡ அதர் - வழி.

எனப் பாராட்டிப் பாடியுள்ளார் பரஞ்சோதி முனிவர். ஈண்டுத் தடாதகைப் பிராட்டியாரை "உலகம் ஈன்ற அம்மை எனக் குறித்திருப்பது குறிக்கொள்ளத் தக்கது. படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழிலிலும் சக்தி சிவம் என்ற இருவருக்கும் சமமான பங்கு உண்டு. சில வேளைகளில் அத்தனை விட அம்மையே சிறந்தவளாகவும் சாத்திரங்களும் தோத்திரங்களும் கூறும். சிவத்தின் பெருமை பலவற்றையும் கூறிப் பின் "அவளால் வந்ததிவ் வாழ்வெலாம்" என்பர் சிவஞான சித்தியாசிரியர். வேதமும் "பக; ஸக்திர், பகவாங்காம ஈஶ, உபா தாதாராவிஹ ஸௌபகாநாம், ஸம ப்ரதாநௌ ஸம ஸத்வௌ ஸமோஜௌ; (=பகம் என்னும் அறுகுணம் சக்தி, பகம் உடையவன் பகவான். அவன் ஈசன். அவ்விருவரும் இங்கே சுபங்கள் எல்லாவற்றையும் தருபவர்; சமமான முதன்மையர்; சமமான ஆற்றலினர். ஒத்த வலிமையர்) என்று கூறிற்று.

எனினும், எல்லா உலகங்களையும் படைத்து, உலக வடிவாக நிற்றலை அம்மைக்கே உரித்தாக வைத்து, "தாயோ: ஸக்திர் அஜரா விஸ்வயோநி:" என்ற அந்த வேதம் கூறுகின்றது. வேத வழிநின்ற பெரியோர்களும் அவ்விதமே கூறி அவளைப் புகழ்கின்றனர். அவர்கள் அருளிச் செயல்களில் சிலவற்றைக் கூறி மகிழ்வோம்.

"பார் பூத்த வல்லி" இது குமரகுருபர முனிவர் வாக்கு. உலகம் அனைத்தையும் பூத்த கொடி என்பது பொருளாம். "ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம் பூத்தாளை" என்றார் அபிராம பட்டர். "பெற்றாள் சகதண்டங்கள் அனைத்தும் அவை பெற்றும் முற்றாமுலை உமையாள்" என்றார் வில்லிபுத்தூரரும். இங்ஙனம் எத்

பன்னிரு கண்ணு பதியே வருக
என்னிடர் தீர்க்கும் இறைவா வருக.

தனையோ பெரியோர்களின் வாக்குகள் உள. அம்மை உலகத்தை ஈன்றவள் என்ற கருத்தைக் கைம் முதலாகக் கொண்டு கற்பனை லாபம் பெறுகின்ற விதத்தை இனிக் காண்பாம். உலகத்திற்குப் 'பூ' என ஒரு பெயருண்டு. 'பூ' என்றால் தமிழில் மலரென்றும், வடமொழியில் உலகமென்றும் பொருளாகும். என் அம்மையாகிய சிவ காம வல்லி பூத்ததால் அன்றோ இந்தப் பூமி பூ எனப் பெயர் பெற்றது என்கின்றார் குமரகுருபரர். அது வருமாறு.

"ஒருவல்லி அல்லிக் கமலத்துள் ஊறுபைந் தேறலொத்த
திருவல்லி, தில்லைச் சிவகாம வல்லி, என்சித்தத் துள்ளே
வருவல்லி, செம்பொன் வடமேரு வில்லியை வாட்கண் அம்பாற்
பொருவல்லி பூத்தலின் அன்றே இப்பூமியை பூவென்பதே"

எம்மிறைவன், (ஊடல் நீக்குவதற்கு) இந்தக் கொடிக்குத் தன் தலைமேல் கங்கை நீரைச் சுமந்து வந்து காலிற் பாய்ச்சுகின்றான். அதனால் இது வெம்மை (புலவி) யாறித் தழைத்து விரிந்த புவனங்களை யெல்லாம் தழைத்து, இணையறப் பூத்து அருள் பழுக்கின்றது என மற்றோரிடத்தில் குமரகுருபரரே மொழிந்துள்ளார்.

உலகங்களுக்கு 'அண்டம்' என ஒரு பெயர் உண்டு அன்றோ? அண்டங்கள் பலவாயிரக் கணக்கானவை. அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்...நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன. "அகிலாண்ட கோடி" என்று மொழிவர். இத்தனை அண்டங்களையும் (முட்டைகளையும்) ஒரு அன்னம் தான் ஈன்றது. அவற்றுள் தோன்றிய சராசரம் ஆகிய குஞ்சுகளை யெல்லாம் தன் கையாகிய சிறகால் வயிற்றினுள் வைத்து அணைத்துப் பாதுகாக்கின்றது. இரை தேடி ஊட்டுகின்றது. அது எந்த அன்னம்?

அத்தனே வாவா அன்னையே வாவா
சித்தனே வாவா சிவசுதா வாவா.

என்றால், பொன்னம் பலத்திலே ஆடுகின்ற, பேரானந்தக் கடலில் புகுந்து ஆடுகின்ற சிவகாமவல்லி என்னும் பச்சை அன்னந்தான் என்று கற்பனை செய்து கூறி மகிழ்விக்கின்றார் அதே முனிவர்.

"வன்னம் செறிவளைக் கைச் சிறகால் தன் வயிற்றினுள் வைத்து
இன்னம் சராசர ஈர்ங்குஞ்சு அணைத்து இரை தேர்ந்து அருத்திப்
பொன்னம்பலத்துள் ஓர் ஆனந்த வாரிபுக்கு ஆடும் பச்சை
அன்னம் பயந்தன கொல்லாம் பல்லாயிர அண்டமுமே"
(சிவகாமியம்மை யிரட்டை மணி மாலை)

இந்தப் பார்பூத்தவல்லி பற்றிப் படர்ந்திருப்பது ஒரு கற்பக மரத்தை. இந்தக் கொடியின் நிழலை யடைந்தால் விண்ணோர் தருக்கள் ஐந்தினையும், சிந்தாமணியையும், காம தேனுவையும் எளிதிற் பெற்று இன்பம் எய்தலாம் என எம்மனோர்க்கு ஊக்கம் அளிக்கிறார்.

"ஏனின்று இரங்குதி ஏழைநெஞ்சே வண்டு இமிர் கடப்பம்
கான் நின்றது மற்றொர் கற்பகமே; அந்தக் கற்பகத்தின்
பால் நின்ற பச்சைப் பசுங்கொடியே முற்றும் பாலிக்குமால்
தேன்நின்ற ஐந்தருச் சிந்தாமணியொடு அத்தேனுவுமே"

சிவகாமவல்லியாம் செழுங்காமவல்லிளம்
சிந்தையுள் வல்வினைத் தீப்பிணி தீரத்
திருவருள் தேனினைத் துளிப்பப்
பெருவரும் இன்பம் பொருந்திவாழ் குவமே.

முத்தனே வாவா முதல்வனே வாவா
கர்த்தனே வாவா கந்தனே வாவா.

ஜய தேவர்.

(ரா)

ஒரு நாள் அந்த தேசத்தரசன், அஷ்டபதியை யாரோ பாடக் கேட்டு, பொருமை கொண்டு தான் ஒரு கீத கோவிந்தத்தைச் செய்து, அதைத்தான் எல்லோரும் பாட வேண்டுமென்றும், ஜயதேவருடைய காவ்வியத்தை பாடினுல் தண்டிக்கப் படுவார்களென்றும் அறிவித்தான். பிறகு ஒரு நாள் அரசன் புருஷோத்தமன் ஆலயத்திற்குச் சென்ற பொழுது, ஜயதேவர் தன் காவ்யத்தைப்பாடிக் கொண்டிருப் தைக் கண்டு, நீர் ஏன் என் காவியத்தை பாடவில்லை" என்று கேட்டான். அதற்கு ஜயதேவர், "அரசனே! தங்கள் காவி யத்தை பாடினுல், புருஷோத்தமன் மகிழவில்லையே. நான் என்ன செய்யட்டும். என்னைக் கோபிப்பதில் பயனில்லை என்ருர்.

அரசன் அர்ச்சகரை அழைத்து இருகாவ்யங்களையும் ஸ்வாமி ஸன்னிதியில் வைக்கும்படி சொல்லி, கதவைத் தாளிட்டு, "எந்த காவ்யம் மேலானதென்று தாங்களே சொல்லவேண்டும்" என்று புருஷோத்தமனைப் பிரார்த்தித் துக்கொண்டு எல்லோரும் வெளியி லிருந்தார்கள். பிறகு அர்ச்சகர் கதவைத் திறந்ததும் ஜயதேவரின் காவ்யம் பக வான் தலையிலும், அரசனுடைய காவியம் ஓர் மூலையிலும் கிடக்கக் கண்டார்கள். அரசன் ஜயதேவரைப் போற்றி மகிழ்ந்தான். அன்றிரவு பகவான் அரசனுடைய கனவில் தோன்றி, "நீவருந்த வேண்டாம். நீயும் என் பக்தன்தான். உன்னுடைய நூலைவிட ஜயதேவனுடைய சொற்கள் என் மனதைக் கொள்ளைக் கொண்டன. அவனை யாரென்றறிந்து, அவனுடைய காவ்யத்தை பக்தி சிரத்தையுடன் பாடக் கடவாய்" என்ருர். அது முதல் அரசன் ஜயதேவரை புரு

ஆதியே வாவா அநந்தனே வாவா
சோதியே வாவா சுந்தரா வாவா.

ஷோத்தமனாகவும், பத்மாவதியை மகாலக்ஷ்மி ஆகவும் நினைத்து அவர்களுக்குப் பணிவிடை செய்தான்.

பகவான் புருஷோத்தமன். ஜயதேவரின் காவ்யத்தின் மகிமையை உலகத்துக்கு எடுத்துக் காட்டவும், ஜயதேவர் பத்மாவதி இவர்களின் பக்தியையும், தாம்பத்திய வாழ்க்கையின் பெருமையையும் எல்லோருக்கும் தெரியப் படுத்தவும் ஒரு ரஸமான லீலையைச் செய்தார்.

முன்காலத்தில் ஒருவர் இறந்தால் அவருடைய மனைவி உடனே உடன் கட்டை ஏறுவது வழக்கம். ஒருநாள் அரசனுடைய சிநேகிதன் ஒருவன் காலகதியை அடைந்த பொழுது, அவனுடைய மனைவி உடன் கட்டையேற அனுமதிபெற, அதை நடத்தி வைக்க அரசனும் சென்றிருந்தான். அந்தச் சமயம் பத்மாவதி மகாராணியைப் பார்க்க அரண்மனை சென்று ராணியுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, ராணி பத்மாவதியை உடன் கட்டையேறும் ஆச்சர்யத்தை பார்க்கப் போகவில்லையா என்று கேட்டாள். அதற்குப் பத்மாவதி, உடன் கட்டையேற இவ்வளவு ஆடம்பரமும், விளம்பரமும் வேண்டுமா? கணவன் உயிரிழந்த க்ஷணத்திலேயே பதிவ்ரதாக்னியால் வெந்து கணவனைப் பின் தொடர வேண்டாமா" என்றாள். ராணி "பிறருக்கு உபதேசம் செய்து விடலாம். தனக்கு வந்தால்தான் தெரியும்" என்று சொல்லிவிட்டு தனக்குள் பத்மாவதியை ஒரு நாள் சோதிக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டாள்.

கொஞ்ச நாளுக் கெல்லாம் அரசன் ஜயதேவருடன் பகவான் புருஷோத்தமனைத் தெரிசிக்கச் சென்றான். அன்றிரவு பூராவும் கோவிலிலேயே தங்கினார்கள். இதுதான் தகுந்த

வேதியர் அன்பனே வேலனே வாவா
நீதியே வாவா நித்தனே வாவா.

சமயமென்று, ராணி, அலறிக்கொண்டு தலைவிரி கோலமாய் பத்மாவதியிடம் சென்று, "ஐயோ! என்ன செய்வேன், என்ன சொல்வதென்று தெரியவில்லையே. இந்த அமங்களமான விஷயத்தைச் சொல்ல நேர்ந்ததே! ஏ மங்கையர்க்கரசி பத்மாவதி! உனக்கும் இந்தவிதி நேர்ந்ததே என்று அழுதாள். பத்மாவதி திடுக்கிட்டு என்ன விஷயமென்று கேட்க, "உன் புருஷன் கோயிலில் திடீரென்று உயிர் துறந்து விட்டாராம். லோகோத்தமரான உன் நாயகனை விட்டு நீ என்ன செய்வாயோ" என்று ராணி நீலித்தனம் செய்தாள். இதைக் கேட்ட பத்மாவதி சற்று மௌனமாய் கண் மூடி தியானத்திலிருந்து, பிறகு "நாதா! இதோ வந்து விட்டேன் என்று மலர்ந்த முகத்துடன் இருந்த இடத்திலேயே உயிரை விட்டாள். இதைப்பார்த்து ராணி, ஐயோ விளையாட்டாகச் செய்தது வினையாய் முடிந்ததே; பரீக்ஷை பார்த்து வீண் கொலைகாரி யானேனே! இவளுடைய பதிபக்தியையும், கற்பையும் அறியாமல் மோசம் போனேனே. ஜயதேவரையும், அரசனையும் எப்படிப் பார்ப்பேன். என்ன சொல்வேனென்று புலம்பிக் கொண்டிருக்கையில், அரசனும் ஜயதேவரும் வந்து நடந்த விஷயத்தை அறிந்து, அரசன் ராணிமேல் கோபங் கொண்டு, கொலைபாதகியான உன்னை இந்த தேசத்தி லிருந்தே துரத்தி விட்டேன். நீ ஸ்திரீயானபடியால் உன்னைக் கொல்லாமல் விட்டேன். மஹா லக்ஷ்மியான பத்மாவதியைக் கொன்ற பாபியான உன்னை மனைவியாகக் கொண்ட நான் இனி உயிரை வைத்துக் கொண்டிருக்க முடியாது என்று தன் உடைவாளால் தன்னுயிரை மாய்த்துக் கொள்ளப் போனான். உடனே ஜயதேவர் அரசன் கையைப் பிடித்துத் தடுத்து, ஒருவரிடத்திலும் குற்றமில்லை. தாங்கள் பயப்பட

பாலனே வாவா பரமனே வாவா
சீலனே வாவா செல்வனே வாவா.

வேண்டாம் என்று சொல்லி, பகவான் ஸன்னிதியில் நின்று கொண்டு, "வஸதியதி கிஞ்சிதபி" என்று ஆரம்பித்து, 19 வது அஷ்டபதியைப் பாடி அபிநயம் செய்தார். சற்று நேரத்திற்கெல்லாம் பத்மாவதி தூங்கி விழித்தவளைப்போல் எழுந்து, ஜயதேவருடன் பாடி அபிநயத்தில் கலந்து கொண்டாள். அரசனும் ராணியும், மற்ற ஜனங்களும் இந்த ஆச்சர்யமான சம்பவத்தைக் கண்டு வியந்து, ஜயதேவரையும், பத்மாவதியையும் ஈஸ்வ ராம்சமென்று பூஜித்து வந்தார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்

35-ஆம் பை

(வி. எஸ். வேங்கடராமன்)

காலமே நான்

அக் கோபிமாரே கண்ணன் ஆவது

தான் வேறு தெய்வம் வேறு என்ற மனநிலை கீழ்ப்படி. தனக்கும் தெய்வத்திற்கும் வேற்றுமை தோன்றாத நிலை மேல்படி. மேல்படி அடைந்தவர் மேலாம் இன்பத்தை அடைவர். இரண்டறக் கலத்தல் என்ற இந்த நிலையை அக் கோபிமார் அடைந்ததும், குழந்தைகளைப் போலவும் பித்தேறினவரைப் போலவும் பேயாழ்வார் போலவும், "நானே கிருஷ்ணன் நானே கிருஷ்ணன் என்று கத்தத் தொடங்கினார்கள். மலைக்கு மலை தேடத் தொடங்கினர். காட்டுக்குக் காடு, ஆற்றிலிருந்து பிறிதொராறு, மரத்திற்கு மரம் என்றிப் படியாக நான்கு அங்குலம்கூட விடாமல் அந்த நூறுகோடிக் கோபிமாரும் தேடினார்கள். ஒவ்வொருவர் உடம்பிலும் ஒவ்வொன்றனிலும் ஆகாசம் போல் உள்ளிடத்து உள்ளான் அக் கண்ணன்.

மூலனே வாவா முருகனே வாவா
கோலக் குறமகள் கொண்கனே வாவா.

வெளியில் பகல் இரவு என்கிற கால ரூபமாகக் கண்ணன் இருக்கிறான். என்ன வேடிக்கை. அரச மரமே! கண்ணனைப் பார்த்தாயோ! அத்தி மரமே! இன்னுமா பதில் சொல்லாமல் இருக்கிறாய்! ஆல மரமே! மோஹனனைப் பார்த்திருப்பாயே! எங்கள் மனத்தைத் திருடின கண்ணனைப் பிடித்துத் தாருங்களேன். மருதாணியே! அசோகமே! புன்னையே! சண்பகமே! பலராமன் தம்பி இங்கே வந்தானா! துளசி! உன் பெயர் கல்யாணி தானே! உன்னிடம் அச்சுதன் வந்திருப்பனே. எங்களை நழுவவிடாதவன் நழுவவிட்டான் அடீ! பேருக்கு ஏற்ற செயல் இல்லையேடீ! அடி மாலதி! ஏ மல்லிகே! மிஸ் ஜாதீ! குமாரீ காட்டு முல்லையே! உங்களைத் தான் நாங்கள் கேட்கிறோம். மாதவன் இங்கே வந்தானோ. மாவே! பலாவே! கடப்பமே! வில்வமே! மகிழே! நாவலே! பிறர்க்கு உதவி செய்யத் தானே இம் மரப்பிறவியை அடைந்திருக்கிறீர்கள். ஒருதவி செய்யக் கூடாதா! கண்ணனைக் காணவில்லை. கண்ணன் போன வழியைச் சொல்லுங்கள்!

மேலே குறித்தபடி சொன்ன கண்ணபிரான் நினைத்த போது ஐப்பசி கார்த்திகை மாதங்களில்கூட மல்லிகைகள் மலராமல் போகுமா என்ன? அக்குளிர் காலத்தில் மல்லிகைகள் மலரவே செய்தன. கண்ணன் பார்வையாகிற எருவு (இது தற்கால விஞ்ஞான முறை எருக்களைவிடப் பல்கோடி மடங்கு சிறந்ததுதானே.) பட்டபோதே பூக்காத காலத்திலும் அப்பூக்கள் பூக்காமல் போகுமா என்ன? எங்கும் பால் நிலா பரக்க ஒளி வீசியது. காடும் மனத்தைக் கவர்ந்தது. கோபிமாரது மனங்கவரக் கண்ணன் குழலை எடுத்தார். செவ்வாயில் வைத்தார். இனிது ஊதினார். இளகின அம்மங்கையர்களது நெஞ்சம், எப்போது கண்ணனது குழலிசை கேட்போம் என்று ஏங்கிக் கிடந்த அவர்கள் இதயத்திற்கு இன்பம் வெள்ளமெனக் கிட்ட, அது பெருக்கெடுத்து அலைகள் மோதிப் பாயத் தொடங்கிற்று. அப்பெண்கள் இவ்வுலகையே மறந்தனர். அவர்கட்கு நினைவு கண்ணனிடந்தானே எப்போதுமே.

அநகனே வாவா புருடனே வாவா
கனகவேள் கையனே கடம்பனே வாவா.

சின்னஞ்சிறு காந்தம் பல ஊசிகளை இழுக்கிறதே

காதினிலிட்ட ஜிமிக்கிகள் அசைய அக்கட்டழகிகள் கண்ணனிருக்கு மிடத்திற்கே ஓடிவரத் தலைப்பட்டனர். ஜகன்மோஹனமான அவ்வேணுகானம் தொடர்ந்து கேட்கப்பட்டது. அவ்வளவு தான். எவ்வளவு வேலை நிறுத்தங்கள்? மெயின்ஸ்பிரிங்—கண்ணனது வேலை.

(1) பால் கறப்பவர் பாதி வேலையிலேயே அப்பாத்திரத்தைக் கைநழுவ விட்டனர். (2) சட்டிப் பாலை அடுப்பில் வைத்தபடி இருக்க அப்படியே விட்டு ஓடிவந்தனர். (3) சோற்றுப் பானையை அடுப்பிலிருந்தும் இறக்காமலே குழலவிழ ஓடிவந்தனர். (4) குடும்பத்தார்க்குக் கலங்களில் உணவு பரிமாறினவர் ரசத்தோடே கரண்டியைப் போட்டு விட்டு ஓடிவந்தனர். (5) குழந்தைகளுக்கு ஒரு சங்கு பால் புகட்டினர். அவ்வளவுதான். கண்ணனிடம் வந்தனர். (6) கணவர்கட்கு ஒருமுறை கால் நெடுகப் பிடித்ததுதான். திடீரென இடையே விட்டுக் கண்ணனிடம் ஓடிவந்தனர். (7) பருப்பு சாதம் சாப்பிட்டதோடு நிறுத்திவிட்டு ஓடிவந்தனர். (8) தலைக்கு எண்ணெய் முதற் கை வைத்ததோடு சரி, அவ்வேலையைப் பார்க்காமல் ஓடிவந்துவிட்டனர். (9) உடம்பைப் பாதி துடைத்துக் கொண்டதும் கொள்ளாததுமாக ஓடிவந்தனர். (10) ஒரு கண்ணுக்கு மையிட்டுக் கொண்டு அப்படியே கண்மையைச் சிமிழியோடே போட்டு விட்டு ஓடிவந்தனர். (11) பஞ்சாபிப் பெண்கள் போல் உடை உடுத்தும், மாதர் பெரிய மேலாடைக்குப் பதில் சிற்றுடையைப் போட்டுக்கொண்டு ஓடிவந்து நின்றனர்.

(அ) பிறர் விருப்பத்திற்குப் பிறர் விருப்பம் உடையார் ஆவதில்லை.

(ஆ) தன் விருப்பத்திற்குத்தான் பிறர் விருப்பம் உடையார் ஆகிறார்கள்.

இந்த உண்மை, அக்கோபிமார்களின் கணவர்க்கோ, தந்தை தாயாருக்கோ, கூடப் பிறந்தாருக்கோ, உற

சநாதனு வாவா சங்கரா வாவா
மனோஹரா வாவா மன்னனே வாவா.

வினர்க்கோ, தெரிந்ததாயிருந்தும் அவ்வேளையில் அவர்கள் நினைவுக்கு எட்டாமற் போனது. கணவன் நினைக்கலாம், தம் மனம் மகிழத்தான் இவள் மனைவியாயிருக்கிறாள் என்று. அவள் தன் விருப்பத்தை நிறைவேற்ற நினைக்கும்போதுதான் கணவன் இனியனாகிறான்; அந்த உண்மை இதுவே.

தன் விருப்பமே ஆத்மானந்தம்

அக்கோபிமாரது உறவினர் தடுத்தனர். தடுக்கவும் வீடுகளையே விட்டனர். கண்ணனது காட்டிற்கே ஓடினர். சில முரட்டுக் கணவர் கண்ணனிடம் ஓடப் பார்க்கிற தம் மனைவியரை, வாசலைத் தாண்டி ஓடவிடாமல் வழிமறித்து, வீட்டினுள் ஓர் அறையில் தள்ளிவிட்டு வெளித்தாழ் இட, அந்த அறைக்குள்ளிருந்த அக்கோபிமார்கள் கண்களையே மூடிக்கொண்டு கண்ணன் தியானத்தில் ஆழ்ந்தனர். இவ்வளவு மறியல்களும் சண்டைகளும் தங்கள் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளவே நிகழ்ந்தன.

(அ) துன்பம் படப் படப் பாவம் தொலையும்
(ஆ) இன்பம் பெறப் பெற புண்ணியம் தொலையும்
(இ) பாவத்தால் அஃறிணைப் பிறப்பு
(ஈ) புண்ணியத்தால் தெய்வப் பிறப்பு
(உ) சரிசம பாவ புண்ணியங்களால் மனிதப் பிறப்பு
(ஊ) பாவபுண்ணிய மணமே விசாதது மோக்ஷம்

இந்த ஆறு உண்மைகளையும் கண்ணன் தன் வேணுகானத்தால் அக்கோபிமாரிடம் விளக்கிக் காட்டினார். தனக்கு விருப்பம் ஒன்றில் இருக்க மற்றவை கசக்கவே செய்யும்.

கண்ணனைக் காண முடியவில்லையே என்று துன்பம் படப்பட அம்மங்கையர்க்குப் பாவம் தொலைய மோக்ஷம் கிடைத்தது. தியானத்தில் கண்ணனைத் தழுவிய சுகம் பெறப் பெறப் புண்ணியமும் தொலைந்தது. ஜீவன்முக்தைகள் ஆயினர் அப்பெண்கள்.

அனாதியே வாவா அசோகனே வாவா
அநாதை நாயகா அபயனே வாவா.

கள்ளப் புருடனைத் தேடிச் செல்லும்
காரிகையர்க்கா முக்தி ?

என்று ஒரு கேள்வி எழலாம். அக்கோபிமாரின் உறவினர்க்குத்தான் கண்ணன் கள்ளப் புருஷனாகத் தோன்றினன். அக்கோபிமார்க்குக் கண்ணன் மெய்க் கணவனாகவும், தாலி கட்டிய கணவர் கனவுக் கணவராகவும் தோன்றினர்கள். கனவின்பத்தை விட்டு மெய்யின்பத்தை நாடுவதும், தன் விருப்பமே என்ற குறிப்பு நினைவில் எழுந்தால், மேலே குறித்த கேள்வி எழாது. உண்மையில் கனவுக் கணவன் மனைவியரது ஒழுக்கமே மக்களிடை காணப்படுகிறது. நனவுக் கணவன் மனைவியரது ஒழுக்கமாக வெளியே நடிக்கப்படுகிறது. புத்தி எப்படிச் சென்றால் என்ன? மேலான பொருளின் சேர்க்கை பெற மேலான இன்பம் கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

பொருளின் பெருமையே உயர்ந்தது

இது உங்கட்கு நல்ல மருந்து. எனக்கு இது கெடுதி தான் தரும் என்று சொல்பவனுக்கும் அந்த நல்ல மருந்து நன்மையே செய்கிறது. அதுபோலத் தன்னைப் பழித்த சிசுபாலனுக்கும் கண்ணன் மோக்ஷம் தந்தார். கண்ணனிடம் கள்ளக் காதல் கொண்டாலும் மோக்ஷமே. மெய்க் காதல் கொண்டாலும் மோக்ஷமே. கோபமே கொண்டாலும் மோக்ஷமே. பயமே அடைந்தாலும் மோக்ஷமே. சிநேகமே கொண்டாலும் தொடர்பையே கொண்டாலும் பக்தியையே கொண்டாலும் மோக்ஷமே. அனைவருக்கும் மோக்ஷத்தைத் தரக் கண்ணன் பூவுலகில் ஆயர்பாடியில் நல்லாயனாகக் காட்சியளிக்கிற காலத்தில், எல்லா வழிகளிலும் தன்னையடைகிறவர்க்கெல்லாம் மோக்ஷம் தராமல் எப்படி இருந்திருக்க முடியும்? அக்கண்ணனே நாம் அடையவேண்டிய பொருள் என்பதொன்றே இவர்கள் வாழ்க்கையிலிருந்து அறியக் கூடியது.

சாந்தனே வாவா சதமகன் தனயாள்
காந்தனே வாவா காரண வாவா.

சிவநேயச் செல்வர்கள் 6

தலைமலை கண்ட தேவர்

(ரசபதி)

பாண்டி நாடு. திருநெல்வேலியைச் சார்ந்த காட்டார்ந்த குடி. இங்கு இருந்த எவரும் அஞ்சா நெஞ்சினர். எதிர்த்தவரைக் கொல்வதையே தொழிலாகக் கொண்டவர். மறவர் மரபினர். முன்னே பின்னே செய்த தவத்தால், அவர்கள் குடியில் பிள்ளை ஒன்று பிறந்தது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது. வேழம் வெருளச் சீறும் வேங்கையின் குலத்தில், ஓர் சேங்கன்று ஊழ் வலியால் தோன்றி உலவல்போல் இருந்தது அச்செய்தி.

இளம் பிள்ளைக்கு ஆதிமுதல் நல்லோர் உறவு. பழுத்த பண்பில் பயிற்சி. பரமன் திருவடியிற் பக்தி. தன் குலத்தவர் போக்கைத் தழுவி, இதுவரை வில்லை எடுத்து ஒரு பறவையைக்கூட வீழ்த்தியது இல்லை. மல்தொடுத்து எவருடனும் மாநிலத்தில் உருளவில்லை.

கல்லொத்த எவர் மனமும் கசிந்துருக, நயமான சொல்லடுக்கல் நலம். சித்தத்தில் இருக்கின்றது சிவம். அக்கண்ணுதல் பரமன் திருவுளம் கனிய, ஓயாது பாடுவதே உத்யோகம். ஆ! வாழ்விக்கும் இப்பேறு வாய்க்குமா ? ஆண்டவனே! நீதான் அருளவேண்டும் என்று, இடையறுது இறைஞ்சி வந்தார் இளஞ் சிறுவர்.

* * *

வழியே சென்ருர் ஒரு மாதவர். அவருடைய சிவசின்ன தாரணம், சிவத்தையே நினைப்பூட்டுகின்றது. பலர் அவரைத் தொடர்ந்து பணிகின்ருர். மாபெருந் தவத்தர் அவரை இம்மைந்தரும் கண்டார். தூய உணர்வொடு அவரைத்தொடர்ந்தார். தொடர்ந்தவர் எல்லாம், நீறுபெற்ற அளவில் நீங்கினர். இவர்மட்டும் பின்னேயே சென்ருர்.

வேந்தனே வாவா வேதனே வாவா
காந்தியுறு செங்கதிர் வேலவா வாவா.

தம்பி! எங்கு வருகிறாய்? என்ன வேண்டும்?

அடிகளே! உடலைப் பற்றிக் கவலைப்படவில்லை. சாவு என்பது சட்டை மாற்றம். அவ்வளவே. இந்த உயிர்க்கு உறுதிவேண்டும். அந்த வழியை அருளவேண்டும். இங்ஙனம் இறைவனை எண்ணி ஏத்தி வருகிறேன். வழிமுறையொடு வழிபாடு நடந்தால், வாழ்விற்கு வழி பிறக்கும். அவ்வழிகளுள், பாடிப் பரவும் நடையே தலையானது என்று பலர் உணர்த்த அறிந்தேன். எப்படிப் பாடுவது? அந்த வழியைத் தாங்கள்தான் அறிவிக்கவேண்டும் என்று, அவர் அடிகளில் முடிபட வணங்கினர் இளைஞர்.

வழி பிறக்க எண்ணம் இருந்தால், ஓயாது இதனை உருவேற்று! எம்மான் அருளால் எண்ணியது நிறைவேறும் என்று, ஐந்தெழுத்தை உபதேசித்தார் அடியார்.

பற்றத் தக்க பஞ்சாட்சரத்தை இறுக்கிப் பிடித்தது இதயம். உணர்வொடு ஏறியது ஒருகோடி உரு. அதன் மூலம் பிறங்கும் உள்ளொளி பிறந்தது.

ஆஹா! என்ன இன்பமாயிருக்கிறது இந்நிலை! பொருள் என்றால் இதுதான் பொருள்; மற்றைய எல்லாம் மருள் என்று உறுதிப்பட உணர்ந்தது உள்ளம். பேசா எழுத்தும் பேசும் எழுத்தும், அவரொடு பேசிக்கொண்டே இருந்தது. அதனால், 'கரவாகிய கல்வியுளார் கடை சென்று, இரவா வகை மெய்ப்பொருள்' எய்தியது. திருவருட் புலமை தெளிந்தது. பரமனை ஓயாது பாடும் பரிசு வாய்த்தது. எண்ணிய எண்ணம் நிறைவேறியது என்று இன்பம் கண்டது நெஞ்சம். எவரும் இவரைப் புலவர் பெயரிட்டுப் புகழ்ந்தனர். இதன் இடையே, வந்தேன் என்று வந்தது மணப் பருவம்.

குரங்கானாலும் குலத்தில் கொள்ளவேண்டும். வேறு விதி இல்லை. மறவர் எழுவருடன் பிறந்த மரகதம் என்

பாவை மணந்தார். அவரா மணந்தார்? இல்லை. அவரை மணக்கச் செய்தது உலகம். அழகிலும், அறிவிலும், அகவொழுக்கத்திலும், பெயர்க்குத் தக்கவள் அப் பெருமாட்டி.

* * *

மைத்துனர் எழுவரும் மாபெருங் கள்ளர்கள். கைவறண்ட போதெல்லாம் கன்னம் வைப்பர். பொருள் கவர்வர். உல்லாசப் பொழுதுபோக்கு; இது அவர்கள் செய்தி.

அதே காலத்தில் புலவர், ஏடும் கையுமாக இருந்தார். இறைவன் திருப்புகழை எழுதுவார். பாடி மகிழ்வார். மற்ற நேரம் எல்லாம் பஞ்சாக்கர ஜெபம். ஆ! என்ன ஆனந்தமான வாழ்வு !

இது நல்ல நடைதான். லௌகிகம் நடைபெற வேண்டாமா! தாய் வீட்டுச் சீதனம் எவ்வளவு நாளைக்கு வரும். ஒவ்வொன்றாய் விற்று விற்று, ஒருவாறு குடும்பம் நடந்தது. கற்பிற் சிறந்த அவர் மனையாள், கணவன் போக்கை அறிந்தவள். ஒன்றுமே வாய் திறப்பதில்லை. அவருக்கும் லௌகிகம் தெரியவில்லை. இனி விற்பதற்கு ஒன்றும் இல்லை. மருண்டது மனைவி மனம்.

குடியிற் பிறந்தவள் என்று அண்ணியர் ஏதோ சிறிது உதவுவர். பல இடங்களில் கடன்பட்டாள். கடன் கொடுத்தவர் வீடு தேடி வந்து நெருக்கடி செய்தனர். மனைவி பல வகையில் வருந்துகிறாள். புலவர் உள்ளம் அது கண்டு பொருமியது.

மரகதம்! பக்குவம் அறிந்து பரமன் காப்பன். அஞ்சாதே நீ என்று ஆறுதல் கூறினர்.

ஸ்வாமி! அண்ணன்மார்க்கு வழிகாட்டும் தெய்வம், நமக்கு மட்டும் வாழ வழிகாட்ட மறந்துவிட்டதோ?

நம்பினேர்க்கு உன்னருள் நல்குவோய் வாவா
சம்பந்த மூர்த்தியே சம்புவே வாவா.

சீ, சீ! திருடுவது ஒரு தொழிலா! குலத்தொழில் என்பது கோமாளித்தனம். கல்லினுள் இருக்கும் தேரைக்கும் வழிகாட்டும் ஆண்டவன், நம்மைக் கைவிடவே மாட்டான்! கண் கலங்காதே நீ! தெளிவுகொள் என்று மனையாளைத் தேற்றினர்.

எவ்வளவு தேற்றியும் என்ன பயன்? வயிற்றைப் பசி வாட்டும் பொழுது, உபதேசம் முன் வந்து உதவுமா என்ன? மறவர்கள் ஒருநாள் வந்தனர்.

மைத்துனரே! நீர் கற்ற வித்தைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, பிழைக்கும் வழி பாரும் என்று குத்தலாகக் கூறினர்.

பிழைக்கும் வழியா? காட்டுங்கள் பார்க்கலாம்! அது உங்கள் வழிக்கு அயலாய் இருக்க வேண்டும்! தெரிகிறதா என்று பொரிந்து தள்ளினர் புலவர்.

அவ்வளவில், வந்த எழுவரும் வாய் மூடிச் சென்றனர்.

எம்பெருமானே! வயிற்றுப் பசியோ வருத்துகின்றதே. வாய் மூடிக் குமுறுகிறாள் மனையாள். ஏழை என்நிலை ஏன் உனக்குத் தோன்றவில்லை; ஆ! உமக்கா தோன்றுது; அபசாரப் படுகிறேன்; மன்னிக்க அத்தா! மன்னிக்க என்று கசிந்து பாடிக் கண்ணீர் பெருக்கினர்.

கல்லும் கரையும் கனிந்த நடையில் மருதூர் அந்தாதி பாடினர்; அதன்மூலம் விமலனிடம் தன் குறைகளை விண்ணப்பித்தார். அப்பொழுதும், திருவருள் செய்திலர் தேவதேவர்.

* * *

மனைவியை அழைத்தார். வேறு வழியே தோன்றவில்லை. இன்று அமாவாசை. உன் துணைவருடன், பொல்லாத் திருட்டுத் தொழிற்குப் போகத்தான் வேண்டும். அதை அவர்களிடம் அறிவித்து விடு என்றார்.

என்னகத்து ஆடும் எண்குண வாவா
வன்னியில் தோன்றிய வள்ளலே வாவா.

அப்படியே சென்றுள்; செய்தியை அறிவித்துத் திரும்பினள். பாழும் பசியும் சூழ்நிலையும், அவ்வழியைத்தான் அறிவித்தது. வேறு தொழில்தான் தெரியாதே!

இரவு மணி எட்டு. மைத்துனர் வந்தனர்.

விதி விளையாடுகிறது! தெய்வமும் சோதித்தால், நான் என்ன செய்வேன் என்று எழுந்தார்.

மழு ஏந்திய சிவவுருவை எண்ணியது மனம். பயின்று தேர்ந்த நாக்கு பஞ்சாக்கரத்தை ஜெபித்தது. கள்ளர் போன திசையில் கால்கள் நடக்கின்றன.

* * *

திருப்புவனம் என்னும் ஊரில் தனிகர் ஒருவர். அவரிடத்தில் பொன்னும் மணியும் நிரம்பியுள. இச்செய்தியை, கள்ளர்கள் முன்னரே அறிந்திருந்தனர். சென்று அங்குச் சேர்ந்தனர்.

அம் மாளிகைக்கு உரியவர், பொருட் செல்வம் பூரித்தவர்; கலைச் செல்வமும் கை வந்தவர்; பரம பக்தர். படுக்கும்போது, பரமன்மேல் சுயமாகப் பாடல் ஒன்று பாடிவிட்டுப் படுப்பது அவர் வழக்கம். பன்னிரண்டு ஆண்டுகளாக இந்தப் பயிற்சி இருந்தது. இறைவா! நின்னடி எய்துவது என்றோ என்ற கருத்துக்களே, அவருடைய பாடல் முழுதும் பரிமளிக்கும். ஒரு நாள்,

தலையில் இரந்துண்பான் தன்உடலிற் பாதி
மலைமகளுக்கு ஈந்து மகிழ்வான் —உலையில்

என்றவரை வாயில் பாட்டு வந்தது. அதன் பின்வரும் இரண்டு அடிகளில் உயர்ந்த கருத்து உருவாக வேண்டும். எண்ணி எண்ணிப் பார்க்கின்றார். ஏமாந்து போகிறார். மூளையைக் குழப்பிக் கொண்டதுதான் கண்ட பலன். ஒரு நாளா இந்த வேதனை? ஒரு மாதமாக, எவ்வளவு யோசித்தும், உருவாகவில்லை பாடல்.

இன்னலை நீக்கும் இறைவனே வாவா
பன்னிரு கண்ணுடைப் பரமனே வாவா

என்ன வியப்பு! சரளமாகப் பாடும் அவர்க்கா இத் தடை? பாடிப் பழகிய வாய்க்கு இது என்ன சோதனே? பாவம். தூக்கத்தை ஏக்கம் தொலேத்தது. அதன் பயனுக, வெம்மை உடம்பில் விளேந்தது. சீதபேதி ஒருபுறம். உபாதை பொறுக்க முடியவில்லே. பாயும் படுக்கையுமாயி ஞர். சாகத் துணிந்தது மனம். அப்போதும் அந்த பாதிப் பாட்டைப் பாடிக் கொண்டேயிருக்கிறுர்.

* * *

கடலிற் புகும் மேகங்கள் போல், கள்ளர்கள் அவர் வீட்டில் கன்னம் வைத்தனர். புறக்கடை வழியே புகுந்தனர்.

புலவரை மறைவான ஒரு இடத்தில் நிறுத்தினர். கள் ளச் சாவிகள் துணே புரிந்தன. கிடைத்தவற்றை ஒவ்வொரு வரும் மூட்டையாகக் கட்டினர். புலவர் இருந்த இடத்தில் வைத்தனர். இறுதியில் அகப்பட்டதையும் சேர்த்து எட்டுப் பங்காக்கினர். அடடா! இது என்ன வேதனே?

ஆ! ஆ! ஐயோ! பாய்ந்து தம்மைப் பிடிக்கப் பலர் வரு கின்றுர். பார்த்தனர். நடுக்கம் பிறந்தது. ஒன்றுமே தோன்ற வில்லே. ஆயிரம் பேர் இருக்கலாம்போல் தோன்றுகிறதே! மாளிகையைச் சுற்றி முற்றுகை இடுகின்றுர் என்பதை அறிந்த கள்ளர்கள், புறக்கடை வழியே, கண்மண் தெரியா மல் கால் விசைத்து ஓடினர்.

அவர்கள் ஓடிவிட்டதைப் புலவர் அறியார். தனித்து இருந்தவர், அவ் வீட்டுத் தலேவர் பாடும் அரைப் பாடலேக் கேட்கக் கேட்க, ஓ! இவரும் ஒரு புலவர் போல் இருக் கிறதே! பாடல் பூர்த்தியாகவில்லே பாவம்; அதனுல்தான் வருந்தி முயல்கிறுர் என்று அறிந்து இளகியது இதயம். தன்னே மறந்தார்; இனி அவர்க்கு உதவ வேண்டும் என்று எண்ணினர்.

சாமளே புத்திரா சாமியே வாவா
கோமள காத்திரக் கோவே வாவா.

'தலையில் இரந்துண்பான்! தன்னுடலிற் பாதி
மலைமகளுக்கு ஈந்து மகிழ்வான்—உலையில்
இருப்புஅன மேனியனுர் என்ருேலோ—என்று முணுமுணுத்தார் புலவர்.
ஆமாம்—திருப்புவன ஈசன் திறம்'
என்று பாட்டை முடித்தார் தனிகர்.

என்ன அதிசயம்! இந்நேரத்தில், அடி எடுத்துக் கொடுத்தவர் யார்? ஓசை வந்த திசை நோக்கி ஓடி வந்தார்.

எவரும் அறியாதபடி இருட்டில் இருந்த புலவரை, ஓடிவந்தவர் மோதினுர்.

ஆஹா! நீர்தானு அடி எடுத்துக் கொடுத்தவர் என்று, தனிகர், இருளில் இருந்தவரைத் தழுவினுர்.

ஐயா! நீண்டநாள் வேதனையை நீக்கினீர்! இனி என் உயிர்க்கு ஒரு இடையூறும் இல்லை. கண்ணுதல் பெருமான் தான், இவ்வுருவம் கொண்டு என் கவலை தவிர்த்தானே! அல்லது அவனை ஏத்தும் அடியவரோ நீர்? ஐயா! ஐயா! தயவு செய்து சுருக்கமாக உண்மையைச் சொல்லுங்கள் என்று மன்ருடுகிருர் மாளிகைக்கு உரியவர்.

என்னடா இது? தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டோமே என்று வியர்த்தது உடல்.

முதலில் விளக்கை ஏற்றும்! கற்றறி மோழைகளில் ஒருவன் நான். கண்ணுதலும் அல்ல; அவனது அடியவனும் அல்லன்.

உடனே விளக்கு ஏற்றப்பட்டது. எட்டுச் சிறு மூட்டைகள் எதிரில் இருக்கின்றன; புறக்கடைக் கதவு திறந்தபடி இருக்கிறது. புலவரிடத்தில் வைதிகம் பொலிகிறது. திடீரென்று உண்டான வெளிச்சத்தில், இவ்வளவும் தெரிந்தன.

காமநோய் தீர்க்கும் கடவுளே வாவா
பீம பராக்ரமப் பிரபுவே வாவா.

ஐயா! என்ன இது? தாங்கள் யார்? நடந்தது என்ன? எல்லாம் கண்கட்டு வித்தை போல் காணப்படுகிறதே என்று தனிகர் கதறினர்.

நம் புலவர் பெருமான் கண் கலங்கினர்; தன் கதையைச் சொன்னர்.

அப்படியா செய்தி என்று அதிசயித்த தனிகர்க்கு, ஆத்திரம் பிறக்கவில்லை; எல்லாம் இறை விளையாடல் என்று தேறிய அவர்க்கு, தெளிவு பெற்றது மனம்.

எட்டுச் சிறு மூட்டைகளை ஒரு புறத்தில் எடுத்து வைத்தார். அவை அங்கேயே இருக்கட்டும்; நீர் இப்படி வாரும் என்ருர்; ஒன்றுமே தோன்ருமல் உள்ளம் நடுங்கி உடல் வியர்த்த புலவர்க்கு, உணவை முதலில் உண்பித்தார்; பயனுன உபசாரம் பல செய்தார். புலவர்க்கிருந்த மன அதிர்ச்சியை அதன் மூலம் அகற்றினர். இரவெல்லாம் பரமன் புகழை இருவரும் கலந்து பாடினர். புராண இதிகாச நுட்பங்களை, உணர்ந்து பேசி உள்ளம் உருகினர்.

பொழுது விடிந்தது. கடன் முடித்தனர். நீராடினர். இறை வழிபாடு நடந்தது.

* * *

அம்பலக் கூத்தன் அருளால், பற்ற வந்த பலர்போல் உண்டானது உருவெளித் தோற்றம். கண்டு ஓடிய எழுவரும், ஒரு இடத்தில் ஒன்று கூடினர். புலமை நிறைந்த மைத்துனர்க்கு, நம்போக்கை அறிவிக்காமல் வந்தோமே! வீணுக அகப்பட்டு, அவர் எப்படி விழிக்கிருரோ என்று கண்ணீர் சிந்திக் கலங்கினர்.

செய்தி அறிந்த தங்கை, ஓ என்று கதறி ஓலமிடலாயினள். இறப்பதே சிறப்பென்று எண்ணுகிறது அவள் மனம்.

* * *

யோகிகள் அகத்தில் ஓங்குவோய் வாவா
யோக வித்தையை ஓதுவோய் வாவா.

ஆ! யார் அது? ஏன் அப்படி இரைக்க இரைக்க வருகிறீர்? வந்தவர் ஓலை ஒன்றைக் கொடுத்தார். இது புலவர் கொடுத்தது என்றும் கூறினர்.

அப்படியா என்று புலவர் மனைவி விரைந்து வாங்கினள்.

அஞ்ச வேண்டா! மைத்துனர் எழுவரும், தங்கையுடன் ஓலை கொணர்ந்தவரைத் தொடர்ந்து வரவேண்டும். நான் நலமே.

ஆ! இது அவர் கை எழுத்துதான் என்று கூவி, மகிழ்ச்சி எய்தினள் மரகதம்.

கலைவலியுடைய கவிஞர் நம் மைத்துனர். வாள்வலியுடையது நம் வாழ்வு என்று இறுமாந்தோம். வாழப் பிறந்தவர் அவர்; அவரை நம்வழியில் இழுத்தது அநியாயம். திருட்டுப் பிழைப்பு இன்றோடு தீரட்டும். அவர் வழியைப் பின்பற்றி, பாவமெல்லாம் தீர பரமன் தாளைப் போற்றுவம்! என்ற முடிவுடன் எழுந்தனர்.

ஓலையை நம்பிப் புறப்படுவம்! ஒருக்கால் இது நம்மை அகப்படுத்தும் சூதாயின், எதிர்த்தாரை எதிர்த்து உயிர் விடுவம். அடுத்த பிறப்பிலேனும் நல்லறிவு தோன்ற, ஆண்டவன் அருள் புரிவானாக என்று துணிந்தது மனம்.

சல்லடம் கட்டினர். கச்சை யிறுக்கினர். குல முறைப்படி உருமால் உடை. பணிபல அணிந்தனர். மஞ்சளாடை கட்டினர். செருப்பில் ஏறினர். வாகுவலயம், வாளொடு கேடயம். போர்க்கு ஏகும் கோலத்தில் இப்படிப் புறப்பட்டனர். தங்கையும் தொடர்ந்தாள்.

* * *

என்ன வியப்பு! புலவரும், செல்வ வளவரும், புளகிதங் கொண்டு, பரமன் புகழ்பாடி ஒரே விரிப்பில் ஒன்றியிருத்தலைக் கண்டனர். கலகல ஒலியுடன் வீழ்ந்து வணங்கினர்.

போக மாமுனி போதகா வாவா
ரோக நாசனு ருத்திரா வாவா.

திடுக்கிட்டு நோக்கினர் புலவர். என்ன கோலம் இது என்றார்.

தவறாக நினைத்த தம் கருத்தை, அவர்கள் கண்ணீர் பெருகக் கதறி யுரைத்தனர். புலவர் அடியில் வீழ்ந்து, புலவர் மனைவி பொருமினள்.

எம்மான் திருவருளை அறிய வல்லார் எவர்? உங்கள் செய்கையால், புதையல் எடுத்த தனம் போலப் புலவர் எனக்கு அகப்பட்டார். இனி அவர் என் சகோதரர். அவர் மூலம் நீங்கள் எனக்கும் மைத்துனர் ஆயினீர்! வாருங்கள் என்று அவர்கட்குப் பாலும் சோறும் பரிந்தூட்டி, அவர்கள் கட்டி வைத்தவற்றுள் ஏழு பொதியை எடுத்துக்கொடுத்து, எட்டாவது மூட்டையைப் புலவர்வீட்டில் சேர்க்கும்படி ஒரு ஆள் தலையில் ஏற்றி அனுப்பினர் தனிகர்.

வணங்கிய எழுவரும் திருந்திய கொள்கையராய், அன்றுமுதல் சிவ பஜனை செய்து சிவனடியவராகிச் சிறந்தனர். கலைமகளும் திருமகளும் கலந்து மகிழ்ந்ததுபோல், கவிஞருடன் தனிகர் சாஸ்திர விசாரணையும் தெய்வ சிந்தனையுமாகப் பல நாள் இருந்து, இருவரும் இறையருள் நிழலில் இன்பம் கண்டனர்.

கலைச்செல்வரும் பொருட் செல்வரும் இப்படிக் கலந்து வாழும் காலம் என்று வருமோ என்று, இடையறுது இன்று இயற்கை அன்னை எண்ணுகின்றனள். அதன்பின் உலகமே அமைதி இன்பத்தை அடையும் அல்லவா! பதினெட்டாம் நூற்றுண்டில் இருந்த பாவலர் இவர் பெயர், தனிகர் பாடிய பாடல் எதுகையோடு ஒன்றி, தலைமலை கண்ட தேவர் என்று சிறந்து இருக்கின்றது. அவர் பாடிய மருதூர் யமக அந்தாதி, புலவர்கள் மனனத்தில் இருந்து, இன்றும் புளகித நடை புரிகிறது. வாழ்க அடியார் என்று அவர்களை வாழ்த்துகிறது நம் வாய்.

வாவா வள்ளி வல்லவா வாவா

வாவா வாசவன் மருகா வாவா.

DHAYA

Dhaya or Bootha-dhaya is an essential requisite for realising God-hood. It is therefore nothing strange that Sri Arunagiri prays for the grant of this quality in his songs. Here is one of such songs:

"நீதத்துவமாகி நேமத்துணையாகி
பூதத்தயவான போதைத்தருவாயே"

You are the one existence, the inseparable companion and friend of the jivatma. Grant unto me the the jnana of Bootha-dhaya, the universal love for all beings. This quality is born of the conviction that the lord resides in every life as the life of life. He is the all-life. Here is another song:

"உயர்கருணை புரியும் இன்பக் கடல்மூழ்கி
உனைஎனதுள் அறியும் அன்பைத் தருவாயே."

As Sri Krishna stated to Arjuna, love or bhakti is *the only* way to know God, to see God, and to enter into God.

"பக்த்யா அனன்யயா சக்ய
அகமேவ விதோர்ஜின :
ஞாதும் த்ர்ஷ்டும் சதத்வேன
ப்ரவேஷ்டும் ச பரந்தப !

So says the Gita. Love alone gives the understanding of the Lord. Love alone is the eye to see God. Love alone will make the entry into God—hood and the ultimate assimilation with the Lord. Sri Arunagiri prays therefore that the Lord may grant him *dhaya* or உயர் கருணை born of the ocean of

kindness so that he may be enabled to see the Lord within himself. As the Lord dwells in every Life, true love of the Lord must necessarily express itself in the love for all beings. To try to love all beings, as man loves himself, is the true education to realise the love within one self.

In man, there is, as in other lives, an instinct of self-preservation which does not penetrate beyond the physical body of matter. The love of man for himself is something more than an expression of this instinct. If a man gets to know what is within him that he loves, he will realise that he loves the Lord within him who is seated in the hearts of all beings. To educate oneself in the love of all living beings is the easiest way of learning to see the Lord within oneself, and this quality of love for all or universal love is dhaya. The great Sri Ramakrishna Paramahamsa lays the greatest insistence on the development of this quality for the aspirant of spiritual realisation. He is reported to have said.

"Through dhaya, one realises God."

"Sages like Sukadeva and Narada always cherised dhaya in their hearts."

"To love all things is dhaya, compassion."

"To love people of all countries (not merely of his own), to love members of all religions is dhaya. Such love comes from love of God—from dhaya."

—*Thiruppugal Mani*

என்னை வேண்டி எனக்கருள் செய்தியேல்
இன்னல் நீங்கும்; நல் இன்பமும் ஓங்கும்; நின்

தன்னை வேண்டிச் சரண்புகுந்தேன்; என்னைத்
தாங்கிக் கொள்ளும்; சரண்பிறி(து)இல்லைகாண்;

அன்னை வேண்டி அழுமகப் போல்கின்றேன்
அறிகி லேன்நின் திருவுளம் ஐயனே!

மின்னை வேண்டிய செஞ்சடை யாளனே!
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே!

No.1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ.1506

Regd. M. No. 5390, Amirthavachani (1955 புரட்டாசி - அமிர்தவசனி)

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924 Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி	1	0	0
„ 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
கணபதி பக்தர்கள் „			
முருகனடியார் „			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Ro
Edited & Published by S. Muth